Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 317

ஞாயிற்றுக்கிழமை
09 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

# எரித்த சாம்பல் மேட்டிலிருந்து ராஜபக்சக்கள் மீண்டெழுவராம்!



## மீள்எழுச்சிப் பயணம் நேற்று ஆரம்பம்

### 3ஆவது தடவையாக மஹிந்தவை ஜனாதிபதியாக்குவோம் என்று சூளுரை

**களுத்துறை, ஒக்ரோபர் 9**

**மே-9 போராட்டங்களின் போது முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவின் எரிக்கப்பட்ட அலுவலகத்தில் ராஜபக்சக்களின் - மஹிந்தவின் மீள் எழுச்சிக்கான பயணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் அணி திரண்டு மூன்றாவது தடவையாகவும் மஹிந்தவை ஜனாதிபதியாக்கி ஆட்சியமைப்போம் என்று கோஷம் எழுப்பினர்.**

15 ▶

# எங்களின் வழிக்கு வந்துள்ளார் ரணில்

## மஹிந்த ராஜபக்ச மகிழ்ச்சி

களுத்துறை, ஒக். 9
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியான வழிக்கு எங்கள் பக்கம் வந்துள்ளார். எனவே அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கப்பட்டு இந்தப்பயணத்தை தொடருவோம் என்று

15 ▶

மஹிந்தவை மீண்டும்

# ஜனாதிபதியாக்கியிருந்தால் இந்தக்கதி நேர்ந்திருக்காது!

## கண்ணீர் விட்டழுதார் ரோஹித்த அபேகுணவர்த்தன

களுத்துறை, ஒக். 9
பொதுஜன பெரமுனக் கட்சியின் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, ஒரு கட்டத்தில், மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் கண்ணீர் சிந்தி அழுது

15 ▶

# நாளை விசேட வங்கி விடுமுறை

கொழும்பு, ஒக். 9
நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு நாளை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ஒ-இ)

வழிபாட்டுத்தலங்களுக்கு

# மின் கட்டணத்தில் விரைவில் சலுகை

கொழும்பு, ஒக். 9
அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணத்துக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வழிபாட்டுத் தலங்களுக்கு,

15 ▶

# வல்லிபுரக் கோயிலில் 14 பவுண் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
நேற்று இடம்பெற்ற வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழாவின்போது 14 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக, ஆறு முறைப்பாடுகள் பருத்தித்துறை பொலிஸாருக்கு

15 ▶

# இலங்கைக்கு அவகாசம்: எந்தவொரு பயனுமில்லை

## இரா.சம்பந்தன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 9
'புதிய தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளையும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு

15 ▶

# இந்தியப் பல்கலையுடன் உடன்பாட்டுக்கு தயக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 9
'இந்தியன் இன்ஸ்ரியூட் ஒப் ரெக்னோலஜி' யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் உடன்பாடு மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதாக அறியமுடிகின்றது. பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயனளிக்கக்கூடிய இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு யாழ்ப்

02 ▶

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

# 200 கிலோ ஹெரோய்ன்; 6 ஈரானியர்கள் கைது

கொழும்பு, ஒக். 9
ஆயிரத்து 200 கோடி மதிப்பிலான சுமார் 200 கிலோ உயிர்கொல்லி ஹெரோய்னுடன்

13 ▶

# இணைந்த வளாகமாக்க அதிகாரமில்லை; இணைந்த நடவடிக்கைக்கு நாம் தயார்

## துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
வெளிநாட்டு பல்கலைக் கழகத்தின் இணைந்த வளாகமாக்கும் உடன்படிக்கைக்கு துணைவேந்தருக்கு அதிகாரமில்லை. ஆனால், ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான இணைந்த

15 ▶

கூட்டத்தில் வெளிநடப்பு:

# யாழ். மாநகரசபை உறுப்பினர்களின் மாதாந்தக் கொடுப்பனவு நிறுத்தம்?

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ்ப்பாணம் மாநகர சபையின் கடந்த மாதக் கூட்டத்தில் பங்குபற்றி அதன் போது ஏற்பட்ட வாக்குவாதங்களின் பின்னர் வெளிநடப்புச் செய்த உறுப்பினர்களுக்கான மாதாந்தக்

15 ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். வல்லிபுர ஆழ்வார் திருவிழா கடந்த 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.
(எ-26.20)

# சிறுமி வன்புணர்வு; முதியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 9

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரால் வன்புணர்வுக்கு உட்படுத்தி கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரை கைது செய்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்க அனுமதியளித்து நீதிமன்றம் கட்டளையிட்டது.

பதின்ம வயது சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டின் கீழ் முதியவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார். பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மன்று, சந்தேக நபரை நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இதேவேளை மருத்துவப் பரிசோதனைகளின் போது சிறுமி கர்ப்பமாக இருக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் முதியவர், சிறுமியை தான் வன்புணர்வு உட்படுத்தவில்லை என்று விசாரணைகளின்போது குறிப்பிட்டுள்ளார். முதியவர்தான் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சிறுமி விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார். முதியவர் வன்புணர்வு உட்படுத்தியதாக சிறுமி அடையாளப்படுத்தும் கடை, ஊரவர்களால் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-5-26)

## இந்தியப்...

பாணப் பல்கலைக்கழகம் பின்னடிப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்தியாவில் மிகப்பிரபலமான முன்னோடியாக இந்தியன் இன்ஸ்ரியூட் ஒப் ரெக்னோலஜி, உலகில் பல நாடுகளின் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு அங்கு இயங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் இலங்கையிலும் இரண்டு இடங்களில் அதனை நிறுவுவதற்கு விரும்பியிருந்தது. இந்திய அரசாங்கம் ஊடாக இலங்கை அரசாங்கத்தை அணுகியிருந்தது. இதன்போது தெற்கிலும், வடக்கிலும் ஒவ்வொரு இடங்களில் அமைப்பதை இந்தியா விரும்பியிருந்தது. தெற்கில் பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு இந்தியன் இன்ஸ்ரியூட் ஒப் ரெக்னோலஜி பல்கலையை நிறுவுமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்ததாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனாலும் வடக்கில் ஒன்றை அமைப்பதில் இந்தியா உறுதியாக உள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள பொறியியல் பீடத்தில் இதனை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் விரும்பியிருந்தது. அதற்கு சாதகமான சமிக்ஞையோ அல்லது உரிய பதிலளிப்புக்களோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடமிருந்து இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை.

ஆனால், சீனத் தூதுவரின் புலமைப் பரிசில் நிதியை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கொழும்பிலுள்ள தூதரகத்துக்குச் சென்று பெற்றுக் கொண்டார். இது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாட்டுக்கு மாறானதொன்றும்கூட.

மேலும், சீனாவின் பல்கலைக்கழகம் ஒன்றுடன் கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள விவசாயபீடம் ஆராய்ச்சி தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட இருந்தது. மாணவர்களின் எதிர்ப்பால் அது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் அதனை நிறைவேற்றுவதற்கான தீவிரத்தை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகின்றது.

புவிசார் அரசியல் பதற்றமான சூழலில், சீனாவுடன் நெருங்கிச் செயற்படுவதற்கு முற்படும் பல்கலைக்கழக நிர்வாகம், இந்தியாவுடனான உறவுக்கு சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தாமல் இருப்பது மேலும் குழப்பங்களுக்கே வழிவகுக்கும் என்று கூறப்படுகின்றது. (அ-ஓ-5)


# மரண அறிவித்தல்

## மயிலு கந்தையா



அளவெட்டி வடக்கு தம்பாகலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு கந்தையா அவர்கள் நேற்று (08.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மயிலு பாறி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், சரோஜாதேவியின் அன்புக் கணவரும், கதிரவேலு, சின்னாச்சி, மாணிக்கம், லட்சுமி, சரஸ்வதி, சோதி, காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் சகோதரரும், தவமலர், பரிமளம், செல்வராணி, அற்புதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 135 2684

தகவல் : கதிரவேலு (சகோதரர்)
குடும்பத்தினர்.

(CS 21159) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 11 . 1954



மறைவு 07 . 10 . 2022

## சீனிவாசகம் நாகராஜா

கோண்டாவில் M.S வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் நாகராஜா அவர்கள் கடந்த (07.10.2022) வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரி சீனிவாசகம், அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம், இரத்தினம் (இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணி (ஜெயம்) அவர்களின் அன்புக் கணவரும், தர்சனா (பிரான்ஸ்), யசோதா (இலங்கை), தர்ஷன் (பிரான்ஸ்), யசிந்தன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (இலங்கை), கௌசிகா (பிரான்ஸ்), இதயரேகா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோன்மணி (இலங்கை), அருளம்மா (பிரான்ஸ்), குமாரசாமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், தணிகாசலம் மற்றும் வசந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சயந்தி, சயந்தன், சாயிநாத் (பிரான்ஸ்), சுஜிவன், சர்வின், துஷானா (இலங்கை), தனுஷ்கா, தஷ்விக்கா, தம்சிக்கா (பிரான்ஸ்), யசிந்தன் - இதயரேகா தம்பதிகளின் மகள் ஆகியோரின் அன்புப் பேரனும், சரோஜினி (இலங்கை), மணிமாலா (பிரான்ஸ்), மகேந்திரம் (இலங்கை), சேகர்(ஜேர்மனி), பாஸ்கரன் (சுவிஸ்), லலிதா (இலங்கை), வசந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (10.10.2022) திங்கட்கிழமை மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோண்டாவில் கொட்டகாடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தர்ஷன் - மகன் Mobile : +33777374739
யசிந்தன் - மகன் Mobile : +94775275951
சுகந்தன் - மருமகன் Mobile : +33695825488
குமாரசாமி - சகோதரன் Mobile : +33658222895
ஸ்ரீதரன் - மருமகன் Mobile : +94774160144

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21160) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOBILE



Unlimited Call BOOSTER 650

# UNLIMITED CALLS மற்றும் SMS


மாதம் ரூ.650/- மட்டுமே.

TRC/M/PRO/22/04

www.sltmobitel.lk

SLTMOBITEL





# உயரிய செல்வந்தர்

பலரும் ஒரு மனிதனின் செல்வத்தைக் கணிப்பது அவரிடம் உள்ள பணத்தைப் பொறுத்தே. ஆனாலும் பழங்காலந்தொட்டே பாரம்பரியத்தின் பெறுமதிகளாலும், குண நலன்களாலும் போஷிக்கப்பட்ட இலங்கையரான எமக்கு, பணத்தாலும், செல்வத்தாலும் ஒரு மனிதனின் செல்வத்துவத்தை அளவீடு செய்வது சிறப்பல்ல.

அதனை இலங்கையரின் சிறப்பம்சங்களோடு திகழும் சம்பத் வங்கியான நாம் என்றும் மறக்கவில்லை. எமது இந்த பிணைப்பானது

**கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பால் இன்றும் என்றும் நிலைத்திருப்பதாகும்.**

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings AA- (lka)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 2 பரப்பு நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.

A-9 வீதியில் இருந்து 100M தூரம் (இரண்டாவது காணி) மூன்று பக்கப் பாதை

- நன்னீர் ஊற்று நிலம்
- செம்மண் காணி
- 20 அடிப் பாதையுடன்
- தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்: காலை 8 - மாலை 06 மணிவரை

**077 6585 999**

## ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for following vacancies: -

- **Teacher - Mathematics (English Medium) - Grade 6-11**
  Preferably a Graduate
- **Laboratory Technician(Science)**
  Should have passed A/L (Science Stream)
- **Accounts Clerk /Management Assistant**
  Preferably a Graduate or AAT fully partly qualified

If you are interested please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach the below given address before 20th October2022.

**The Principal**
**St. John's College**
**Jaffna**

(CR 38230 (3/6))

## SHANTHIHAM
Association for Health & Counselling

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தினால் IMHO அமைப்பின் நிதியனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள "பால்நிலை சமத்துவம்" எனும் திட்டத்தில் கீழ்வரும் பதவி நிலைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இச் செயற்திட்ட பதவி நிலை வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. காலப்பகுதி – 1வருடம் (ஒப்பந்த அடிப்படை). தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையினை 2022.10.16 ம் திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

### பதவி வெற்றிடங்கள்

**ஆவணக் கண்காணிப்பாளர்**
**(Documentation Officer – Jaffna/ Kilinochchi/ Mullaitivu) – 01**
முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது தொடர்புபட்ட துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**உளவளத்துணையாளர் (Counsellor – Kilinochchi ) – 01**
உளவளத்துணையில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**அலுவலக உதவியாளர் (Office Aid – Jaffna, Kilinochchi, Mullaitivu) - 03.**
குறைந்தது தரம் 10 இல் சித்தி பெற்றிருப்பதுடன் குறித்த துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

No.8,8/1, Katpahavinayakar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.
[illegible]
Email To: hr.shanthiham@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தற்காலிகங்களால் எதுவும் மாறாது

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை அகலக் கால் விரித்திருக்கின்றது. ஆபத்தான போதைப் பொருள்களுடன் இளையோர்கள் கைது செய்யப்படும் செய்திகள் நாளாந்தம் வெளியாகி நெஞ்சைப் பதைபதைக்க வைக்கின்றன. இனத்தின் எதிர்காலமான இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகித் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தவண்ணம் இருக்கின்றனர்.

அண்மைய நாள்களில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள்களுடன் தொடர்புடைய குற்றங்களும் அதிகரித்திருக்கின்றன. அதேநேரம் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் அதிர்ச்சி கொள்ள வைக்கின்றன. இதுவரை காலமும் இந்தப் பெரும் பிரச்சினையைக் கவனத்தில் எடுக்காது இருந்ததன் விளைவு இப்போது வெளித்தெரிய ஆரம்பித்திருக்கின்றது. ஆனால், இப்போதும் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் வேதனைக்குரியதாக இருக்கின்றது. இளையோர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்படுகின்றன. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், இவையெல்லாம் எம் இளைய சமுதாயத்தைப் போதைப் பாவனையில் இருந்து விடுவிக்குமா? என்பது கேள்விக்குறியே.

இளையோர்கள் தாமாக முன்வந்து போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபட முயன்றாலும் முடியாத நிலைமையே இப்போது வடக்கு மாகாணத்தில் இருக்கின்றது. அவர்கள் உளவள ஆலோசனைகள், சிகிச்சைகள் மூலம் சமூக மயப்படுத்தப்பட்டாலும் மீண்டும் போதைப் பொருளை நாடும் சூழ்நிலையிலேயே இருக்கின்றனர். அதற்கு அவர்கள் மீது குற்றஞ்சுமத்த முடியாது, ஏனெனில் போதைப் பொருள்களின் ஈர்ப்பு அவ்வாறானதே. இந்தப் பெரும் பிரச்சினைக்கு தீர்வு வடக்கு மாகாணத்துக்கு போதைப் பொருள் வரும் வழிகளை அடைப்பதும், வடக்கில் போதைப்பொருள்விற்பனையைத்தடுப்பதுமேயாகும்.

போதைப் பொருள் விற்பனைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்படும் சிறு சிறு வியாபாரிகளைக் கைது செய்து, அதைப் படம் போட்டுக் காட்டுவதுடன் பாதுகாப்புத் தரப்பினரின் கடமை முடிந்துவிடுகின்றது, அறிக்கைகளை விடுப்பதுடன் ஏனைய தரப்பினரின் கடமை முடிந்து விடுகின்றது என்ற நிலைமையே இப்போது இருக்கின்றது. வடக்கு மாகாணத்தின் போதைப்பொருள் விற்பனை முதலைகளை இனங்காண்பதற்கும், அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்துவதற்கும் எவரும் தயாரில்லை அல்லது எவருக்கும் தைரியமில்லை என்பதே உண்மை நிலைமை.

இளைய சமூதாயம் இந்தப் பெரும் நரகத்தில் இருந்து விடுபட வேண்டுமானால் நாம் முதலில் செய்ய வேண்டியது, வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதே. அதற்கான முழு முயற்சிகளையே உரியவர்கள் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாது எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளும் தற்காலிகத் தீர்வுகளே. தற்காலிகத் தீர்வுகளால் எதுவும் மாறிவிடப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

### நாளொரு நல்வார்த்தை

"உன்னுடைய தவறுகள் உன்னால் மட்டுமே வந்தன. அதனால் வேறு யாரையும் உன் தவறுக்கு காரணம் சொல்லாதே!"

- ஹிட்லர்




# வர்த்தகம், முதலீட்டு வாய்ப்பு இலங்கை - இந்தியா பேச்சு

**கொழும்பு, ஒக்.9**

**வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக முதன்மைச் செயலாளர் ராகேஷ் பாண்டே ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.**

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துதல், விவசாயத்துறை, வெளிநாட்டு கையிருப்பை பராமரிக்க ஏற்றுமதி உற்பத்தி நிறுவனங்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் மற்றும் சில இறக்குமதிகள் நிறுத்தப்பட்டதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை நுகர்வோருக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கு அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது என்று அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பல வர்த்தக உடன்படிக்கைகள் முடிவுக்கு வரவில்லை எனவும், இந்த முரண்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய அமைச்சரவை நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# நாட்டில் அதிகரிக்கும் வாய்ப் புற்றுநோய்

கொழும்பு, ஒக்.9

நாட்டில் பதிவாகியுள்ள வாய்ப் புற்றுநோய் நோயாளர்களில் 70 சதவீதமானவர்கள் ஆண்கள் என இலங்கை தேசிய பல் மருத்துவமனையின் பணிப்பாளர் அஜித் தன்தநாராயண தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களிடம் தற்போது வாய் சம்பந்தமான நோய்கள் மற்றும் வாய்ப்புற்று நோய் என்பவை அதிகமாக காணப்படுகின்றன. வாய் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால் அருகில் உள்ள அரச பல் சிகிச்சை நிறுவனத்துக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது மக்களிடையே பல் புற்றுநோய் அதிகளவில் காணப்படுகிறது. இனிப்புப் பண்டங்கள் உண்பது, குளிர்பானங்கள் குடிப்பதால் சிலருக்கு வாய் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான வாய் தொடர்பான நோய்களால் ஏற்படும் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ-இ)

**நாளை** 10.10.2022 திங்கட்கிழமை புரட்டாதி - 23

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMG
Capital Maharaja Group




# சுகாதார நப்கின்களின் விலை கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது

சுகாதார நப்கின்களின் விலையேற்றத்தினால் மாதவிடாய் காலங்களில் மாணவிகள் பலர் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை என்பதை இரு வாரங்களுக்கு முன் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த விலையேற்றத்தினால் நாட்டின் எதிர்கால சந்ததியினரின் கல்விச் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது.

எனவே மாதவிடாய் சுகாதார மேம்பாட்டிற்கு முன்னின்று உழைக்கும் Eva நாடாளாவிய ரீதியில் பாடசாலை மாணவிகள் எதிர்நோக்கும் இப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளது.

Eva பெருமையுடன் அறிமுகப்படுத்தும் Eva Dream.
பாடசாலைகளில் மட்டும் இலகுவாக கிடைக்கும் சிறந்த தரத்திலான சுகாதார நப்கின்களாகும்.

இதனால் இனி மாதவிடாய் காலங்களில் எந்தவொரு மாணவியும் பாடசாலையை தவறவிடத் தேவையில்லை.

ரூ. 140/-
பாடசாலைகளுக்காக மட்டும்




ஒவ்வொரு மாணவியும் கனவுகள் காணட்டும்

Eva
தயாரிப்புகள்
இலங்கையில் மாதவிடாய் சுகாதாரத்தில் முன்னணியில்

ICL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு காணி தேவை

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், ஆகிய மாவட்டங்களில் பிரதான வீதியில் வீடு மற்றும் வெற்றுகாணி வாடகைக்கு / குத்தகைக்கு உணவு விடுதி (Resturan) நடத்துவதற்கு தேவை.

**தொடர்பு : 070 244 9791**
**காசி. இராஜன் - கொழும்பு**

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாணிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையில் 1 பரப்பு 41/2 குளியுடன் (14 1/2 Perch) உடன் கூடிய Building விற்பனைக்கு உண்டு. 4 Rooms, Kitchen, Bathrooms சகல வசதிகளும் உண்டு.

Building Fully Tiled செய்யப்பட்டுள்ளது.

LANKA PROPERTY SOLUTIONS

முக்கிய குறிப்பு :- Commercial மற்றும் Residence தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். வீதிக்கு மிக அருகாமையில் இருப்பதால் Ideal for Hotels, Restaurants, Rest House மற்றும் வதிவிட தேவைகளுக்கும் (Residence தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்) தரகர் தேவையில்லை.

விலை : 3 கோடி 20 இலட்சம் ரூபாய்

**Lanka Property Solutions**

தொடர்பு : **076 394 9052**

## டுபாயில் டெக்சி டிரைவர்களுக்கான வேலைவாய்ப்பு

- வாகன அனுமதி பத்திரம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 1000 வேலை வாய்ப்புக்கள்.
- சம்பளம் AED 2, 000 + கொமிசன்.
- வயது எல்லை 23 - 50 வரை.
- டுபாய் டாக்ஸி கோபரேஷன் பிரதி நிதிகள் மூலம் நேர்காணல் இடம்பெறும்.
- தங்குமிடம் மற்றும் மருத்துவம் இலவசம்.
- சென்று வருவதற்கான விமான டிக்கெட்டுகள் இலவசம்.
- மேலதிக விபரங்களைக்கு நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

**ஹோவாஸ் எசோசியேட்ஸ் (பிரைவெட்) லிமிடெட்**
**இல. 05, பிகரிங்ஸ் வீதி, கொழும்பு 13.**
**தொலைபேசி : 011 232 3653**
**Mobile : 074 349 8237**
**(அனுமதி பத்திரம் இல. 0750)**
(CR 38223) (3/6)

## UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

**குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா**

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்தவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: **0772 281 085**
E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com
**J B P VISA SOLUTIONS (PVT) LTD**
(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)
www.thevisasolution.com

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களிற்கு மேலாக இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். எமது இல்லத்தில் புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம். கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.

தொடர்புகளுக்கு
**077 810 6857, 077 154 2067**
**021 226 5551**
(NE 942) (3/6)

## விற்பனைக்கு

- உரும்பிராய் சந்தியில் இருந்து 100 மீ தூரத்தில் 6 பரப்பும் 2.75 குளி காணியுடன் வீடு விற்பனைக்கு.
- கோப்பாய் ராசபாதையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு

Contact number
Heman Antony Rajeswaran
+ 94 74 002 2214
(cs 18314) (2/6)

யாழ். கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
**கனிஷ்ட வித்தியாலயம் மல்லாகம்**
முன்னாள் அதிபர் மூ. அருளையா
ஆசிரியர் தவமலர் அருளையா
தம்பதிகளின் ஞாபகார்த்த
**நினைவுப் பேருரையும் பரிசளிப்பும்**
**2020 - 2021**

- இடம் : பாடசாலை மண்டபம்
- காலம் : 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : முற்பகல் 9.00 மணி

தலைமை
திரு. இ. நந்தகுமாரன்
(பாடசாலை முதல்வர்)

நினைவுப்பேருரை
திரு.கு கௌதமன்
(தொழில் வழிகாட்டுதல் ஆலோசகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்
திரு சி. மதியழகன்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
கல்வி நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்
திரு. ச. கிருபானந்தன்
உதவிக்கல்விப்பணிப்பாளர். முன்பள்ளி,
வலிகாமம் கல்வி வலயம்)
திரு சி. விக்னராஜா
(ஓய்வு பெற்ற முகாமையாளர்,
இலங்கை வங்கி, சுன்னாகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யா /கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம் மல்லாகம்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1993 இல் பிறந்த செவ்வாய்க்குற்றம் அற்ற கொழும்பில் உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

(ACO 979651) **077 854 7911**

## வேலை ஆள்கள் தேவை

246, நாவலர் வீதியில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ள வேலை ஆள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**021 222 6830, 077 352 8986**

## வாடகைக்கு

நெடுங்குளம் றோட் அருளம்பலம் லேன், அரியாலையில் 3 Bedroom, Hall, kitchen, 2bathroom, 2 balcany உடனான மாடி வீட்டின் மேல் தளம் நவீன வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
(CS 46960) (3/6)

**074 216 8717, 074 223 6815**

## ஆசிரியர் தேவை

A/L ஆங்கில மொழி மூலம் கணிதம் பயிக்கின்ற மாணவனுக்கு நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் படிப்பிப்பதற்கு (Home work Help) தகுதியான ஆசிரியரை எதிர்பார்க்கின்றோம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(CS 46965) (3/6)

**077 871 5430, 076 856 0549**

## மணப்பெண்கள் தேவை

யாழ்.இந்து, கௌரவ குடும்பம், ஜேர்மனியில் தொழில்புரியும் 1988 ஆயிலியம் மகனுக்கு, ஜேர்மனியிலும், 1991 பூரட்டாதி மகனுக்கு ஜேர்மனி, கனடா, சுவிஸ் நாடுகளில் வதியும் மணப்பெண்கள் தேவை.

**077 171. 2877** (CS 962) (3/6)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ரம்புட்டான், ஒட்டுமா, கஜூ, கொய்யா, மாதுளை, கமுகு, [illegible], [illegible] ரகன் [illegible], செவிளநீர் தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினிசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டரப்ரூட், ரம்புட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிறல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் வந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## சொகுசு வீடு விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், சபாபதி வீதி, கொக்குவில்**

05 படுக்கையறைகள், சுவாமி அறை, களஞ்சிய அறை, பெரிய ஹோல், சமையலறை, திறந்த வரவேற்பு அறை, மா, பலா, தென்னை மரங்களைக் கொண்ட பெரிய தோட்டம். CCTV, Remote Control Gate, மற்றும் கராஜ்

**விலை 120 மில்லியன்**

**075 6137811 / 076 2442626**
**077 6298608 / 0777 125904**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பான நகர மத்தியில் அமையப்பெற்றுள்ள 20 பேர்ச்சஸ் அளவுடைய காணி விற்பனைக்கு. அமானோ தகட்டினாலான களஞ்சியசாலையையும் கொண்டது.

மேலதிக விபரங்களுக்கு
**070 431 2546**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 12 - 1957

மறைவு 07 - 10 - 2022



## திரு. செல்லத்துரை திருநாவுக்கரசு (சோமு)

(முன்னாள் ஊழியர், காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, ஊழியர் காங்கேயன் பேக்கரி )

தையிட்டி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு (சோமு) அவர்கள் கடந்த (07.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற சிவசம்பு - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மாசினியின் அன்புக் கணவரும், கிருஷாந், உஷாந், நிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கநாயகி, காலஞ்சென்ற இளமுருகனார் (முன்னாள் அதிபர்), செல்வராசா (முன்னாள் G.M. தெல்லிப்பளை M.P.C.S), காலஞ்சென்ற பராசக்தி, பரமேஸ்வரி, சுந்தரமூர்த்திநாயனார், கண்ணப்பநாயனார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சஞ்ஜெய், ஸைந்தவி, விக்ராந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தையிட்டி ஆவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
அம்மன் கோவில் வீதி, தையிட்டி.
நிஷாந் : 077 904 7947, உஷாந்: 077 239 5909
கிருஷாந் : 077 134 5344

(CS 21143) (3/6)

# மரண அறிவித்தல்

அன்னைமடியில் 03 - 09 - 1956

இறைவனடியில் 29 - 09 - 2022



## அமரர் திரு.கணபதிப்பிள்ளை சந்திரராஜா (சந்திரன்)

காரைநகர், இடைப்பிட்டியை பிறப்பி டமாகவும், இலண்டனை வதிவிடமாகவும், கொண்டிருந்த திரு.கணபதிப்பிள்ளை சந்திரராஜா (சந்திரன்) அவர்கள் வியாழக் கிழமை கடந்த (29-09-2022) இலண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கணபதிப்பிள்ளை (சிறாப்பர்) காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும், மனோண்மணியின் (சின்னன்) அன்புக்கணவரும், யதீபன், கஜன், அனுயன், அவர்களின் பாசமிகு தந்தையும், புஸ்பகாந்தி (இலங்கை), சந்திரகாந்தி (இலங்கை), சுந்தரகாந்தி (இலண்டன்), இந்திரகாந்தி (இலண்டன்) ஆகியோரின் சகோதரரும், தெய்வேந்திரன் (இலண்டன்) பரமசாமி (பரா - இலங்கை), சண்முகராஜா (இலண்டன்), செல்வநாயகி (ஜேர்மனி), தவமணி (இலண்டன்), மங்கையக்கரசி (இலங்கை) காலஞ்சென்ற பரமானந்தம், பரம்ஞ்சோதி (சோதி - இலண்டன்) விவேகானந்தன், பத்மநாதன் (குழந்தை -இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை 10.00 Am - 12.00 Pm வரை நடைபெற்று தகனக்கிரியைகள் 12.Pm- 12.30 Pm வரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CR 38237) (3/6)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

69 நாள்கள் நிரம்பிய அழகிய German Shepherd (Policedog) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 869 5005

## விறகு விற்பனைக்கு

பனை, அல்லிப்பனையில் வேம்பு, நாவல், காய்ந்த விறகு விற்பனைக் குண்டு, மொத்த வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்.

077 837 5832

## நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### பதிவு இல : 1662
# பகிரங்க மூடிய கூறுவிலை

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான லொறி விற்பனை செய்யப்படவுள்ளது. **லொறி இல : LH 9813 பார்வையிடும் இடம் கூட்டுறவுச் சபை அச்சகம், இல: 38 K.K.S வீதி யாழ்ப்பாணம், வீரசிங்க மண்டப அருகாமை நேரம் 9.30 - 3.00 பிற்பகல் பார்வையிடும் திகதி 10.10.2022 - 19.10.2022 வரை** மேற்படி லொறியை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் 1000/- (ஆயிரம் ஐ பொது முகாமையாளர் நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு காசுக்கட்டளையாக அனுப்பமுடியும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 20.10.2022 திகதிக்கு முன் தலைவர் நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 12ஆம் வட்டாரம் நெடுந்தீவு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிடவும்

மூடிய கூறுவிலைகள் 26.10.2022 ஆம் திகதி 12.00 மணிக்கு நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்படும் கேள்விதாரர்கள் சமூகமளிக்க முடியும்.

குறிப்பு : மேற்படி கூறுவிலைக்கு சுயமாக தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் முழுப்பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி கூறுவிலை என்பன உள்ளடங்கும் வகையில் இருத்தல் வேண்டும்.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள தலைவர்**
**நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**நெடுந்தீவு.**

**077 662 4121**
**076 031 5007**

(CS 46963) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 06 . 1945

மறைவு 07 . 10 . 2022



## திருமதி நடராசா மகேஸ்வரி

சிவன் பண்ணை வீதி கொட்டடியை பிறப்பிடமாகவும் தாமரை வீதி, ஆறுகால் மடத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி அவர்கள் கடந்த (07.10.2022) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும், வில்வமங்களம், சிவபாலன், ராமநாதன், யோகராஜா, தங்கராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வனஜா (கனடா), சிவகுமார், வசந்தி, மனோஜ்குமார் (ஜேர்மனி), வாசுகி, காலஞ்சென்ற வனிதா, ஞானகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராஜா (கனடா), றஞ்சனா, சூரியகுமார், சிவஞானவதி (ஜேர்மனி), ஜெயகுமார், யாழினி (ஆசிரியை, புங்குடுதீவு/ திருநாவுக்கரசு வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சாருஜா, சதுர்த்திகன், பிரியங்கா, துசாந், பிருத்திகா, கார்த்திகா, கார்த்திக், நிரோஷன், கௌசியா, கஜாகரன், காலஞ்சென்ற யதுசிகா, கர்சினி, மிஷானன், ரகீர்சன், பிரகீர்சனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தனீஸ், யுகஷ்ரி, யக்சிகா, றஸ்வின், அனன்யா, ஹறிவத்சன், கௌதமன், திக்சிகா, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25/1, தாமரை வீதி,**
**ஆறுகால்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 604 7104, 077 589 0979**

(CS 46967) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனப்பசளை உங்கள் தோட்டத்திற்கும்

அனைத்து விதமான பழங்கள், மரக்கறிகள், பூ மரங்கள் மற்றும் பெருந்தோட்ட பயிர்களுக்கு பொருந்தும்

- ✓ பரிந்துரைக்கப்பட்ட தரத்தின்படி தயாரிக்கப்பட்ட உயர்தர உரங்கள் விற்பனைக்கு உள்ளன.
- ✓ மண்ணின் நுண்ணுயிரிகளின் செறிவூட்டல் ஊட்டச்சத்து கலவையை மேம்படுத்துகிறது.

எந்த அளவிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**076 76 75 358**

Quick Ads


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 20 கலிபா அப்துல் காதர் வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 61/4 ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல்

குறித்த ஆதனத்தின் ஆதன பெயரானது எமது ஆதன பதிவேட்டில் அபூபக்கர் பெண் நாச்சியாவின் உரிமையாளர் என காணப்படுகின்றது. இவ் ஆதனத்தை இலக்கம் 73 கமால் ஒழுங்கை சோனக்தெரு யாழ்ப்பாணத்தை சேர்ந்த மஹூனா மரிக்கார் ஜெசூர் என்பவர் பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.எம்.றமீஸ் முகதாவில் 2011.02.15ம் திகதியிட்டு இல 2077 இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரண நிலப்பரப்பு 01குளி 11.53 அளவுடைய ஆதனம் தனக்கு உரிமையுடையது என தெரிவித்து வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார். குறித்த வெளிப்படுத்தலுறுதியில் செய்னம்பு என்பவர் ஆரம்ப கால ஆதன சொந்தக்காரர் எனவும் அதன் பின்பு குறித்த ஆதனத்தை அவரது மகனான மொகமட் குசைன் தபித் என்பவருக்கு நன்கொடையளிக்கப்பட்டதாகவும் குறித்த மொகமட் தபித் என்பவர் 1988ம் ஆண்டளவில் எம்.எம்.மன்சூர் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மொகமட் சகீன் என்பவருக்கு விற்பனை செய்து உறுதி நிறைவேற்றியதாகவும் அதே நொத்தாரிசு முகதாவில் 1989 ம் ஆண்டு மொகமட் சகீன் என்பவர் மஹூனா மரிக்கார் யசூர் என்பவருக்கு அறுதி உறுதி நிறைவேற்றியதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். நாட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக குறித்த உறுதிகளின் மூலப்பிரதிகளை பதிவிற்காக சமர்ப்பிக்கமுடியவில்லை எனவும் இணைப்பிரதிகளும் குறித்த நொத்தாரிசினால் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் மஹூனா மரிக்கார் ஜெசூர் என்பவர் குறித்த ஆதனத்தில் 1877 இலக்க நில அளவைப் படத்தின் பிரகாரம் துண்டு 1 என குறிப்பிடப்பட்ட குளி 15.80 அளவுடைய நிலப்பரப்பினை பிரசித்த நொத்தாரிசு சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் 2019.12.26ம் திகதி நிறைவேற்றப்பட்ட 17045 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது மனைவி அவ்வூர் ஜெசூர் சித்தி நஸ்றின் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

மஹூனா மரிக்கார் ஜெசூர் என்பவர் தனது ஆதனத்தில் 1877 இலக்க நில அளவைப் படத்தின் பிரகாரம் துண்டு 2 என குறிப்பிடப்பட்ட குளி 13.82 அளவுடைய ஆதனத்தை தனது மனைவியான ஜெசூர் சித்தி நஸ்றின் எனபவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா ஶ்ரீதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4769 ம இலக்க 2022.06.06ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் நன்கொடையளித்துள்ளார்.

மேலும் இவ் ஆதனங்களை ஜெசூர் சித்தி நஸ்றின் என்பவர் அவரது கணவர் மஹூனா மரிக்கார் ஜெசூர் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா ஶ்ரீதரன் முகதாவில் 2022.06.16ம் திகதி நிறைவேற்றப்பட்ட 4770 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன விபரம் வருமாறு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட J/85 கிராம சேவகர் பிரிவில் உள்ள "மணற்காடும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு 01 குளி 11.53ம் கிணறும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 2009.10.25ம் திகதி அளந்து வரைந்த 1249ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். செல்வராஜா அவர்களால் 2019.11.25ம் திகதி 1887ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் லொட்1 . லொட்2 என சுட்டப்பட்டதன்படி நிலப்பரப்பு 01 குளி 11.12 கட்டடங்களும் கிணறும். இதில் லொட் : என்ற பாகம் குளி 15.80 (பதிவு A 85/20) மற்றும் லொட் 2 என்ற பாகம் குளி 13.32 (பதிவு D 682/173) கட்டடமும் கிணறும் இவை இரண்டும் அருகருகே இருப்பதனால் லொட் 1 லொட் 2 என்ற பாகங்கள் ஒன்றாக்கி நிலப்பரப்பு 1 குளி 11.12 கட்டடமும் கிணறும் இந்த நிலப்பரப்பு 1 குளி 11.12 ற்கும் எல்லைகள்

கிழக்கு - சுகிர்தராஜா பெண் மடோனாவின் ஆதனமும் ஒழுங்கையும்
வடக்கு - பெரிலோ பிரியங்காவினதும் மறுபேரினதும் ஆதனம்
மேற்கு - நெவில் விமலா வனிதாவின் ஆதனம்
தெற்கு - றோ.க.த.கலவன் பாடசாலை ஆதனம்

இதடங்கலும்
தற்போது இவ்வாதனத்தை மஹூனா மரிக்கார் ஜெசூர் எனபவர் இவ்வாதனத்தை தனது பெயரில் எமது ஆதனப் பதிவில் பெயரமாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மஹூனா மரிக்கார் ஜெசூர என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயரமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன.

முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(cr.35498)(2.6)


**WAGON R**
விற்பனைக்கு

WAGON R FX
2018 / Doctor owned
5.3 Million

077 492 7947
076 036 0923

(CR 35232) (3/6)

# வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் மண்டைத்தீவுப் பகுதியில் உள்ள கடல் பண்ணை ஒன்றிற்கு இரவு நேர காவலாளிகள் / பண்ணைப் பராமரிப்பாளர்கள் தேவை. காவலாளிகள் இரவு முழுநேரம் வேலைபார்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். பண்ணையில் தங்கி நிற்கக் கூடியவராக இருக்கவேண்டும். நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர் அலுவலக நேரத்தில் (9am - 5pm)

**077 784 5566** என்ற எண்ணிற்கு தொடர்புகொள்ளவும்.

# கனடாவில்

ஆரம்பக்கல்வியை தொடர்வதற்கு இலங்கையிலுள்ள ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான ஓர் விசேட அழைப்பு...




இது இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற ஓர் சிறப்புச் சலுகையாகும்

- ☑ பெற்றோர்களுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு
- ☑ வேலை மற்றும் நிரந்தர குடியிருப்பிற்கான வாய்ப்பு
- ☑ சிறார்களுக்கு அடுத்த வருடத்தில் இருந்து சுதந்திரமாக கல்வியை தொடர வாய்ப்பு
- ☑ விசேட தகைமைகள் மற்றும் IELTS தேவை இல்லை

**அனைத்து கட்டணங்களும் விசாவிற்கு பின்**

☎ +94 112 890 692 ✆ +94 777 788 732

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com / info@academiclanka.com
www.academiclanka.lk


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் **07.10.2022** நடைபெற்ற **36ஆவது பட்டமளிப்பு** விழாவில் **கலைத்துறையில் B.A (Hons)** பட்டத்தை பெற்ற

**செல்வன் பிரவீன் பேணாட்சுரேஷ்**

அவர்கள் மென்மேலும் பல பட்டங்கள் பெற்றுயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.



*வாழ்த்துவோர்*
**குடும்பத்தினர்**
அப்பா, அம்மா, தம்பி
வலம்புரம், கொழும்புத்துறை

(CS 21144) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLTC Research University

# SLTC ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பாடநெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்தல்

நீங்களும் SLTC ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பாடநெறிகளுக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரியாக அல்லது விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பவராக, க.பொ.த. உயர் தரத்தில் தோற்றியுள்ள, சகல பாடங்களிலும் சாதாரண சித்தியெய்தியுள்ள (S) அல்லது உயரிய பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர் அல்லது மாணவியெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நிலையத்துக்கு வருகை தந்து 2022/2023 கல்வியாண்டுக்காக நீங்கள் விரும்பும் பட்டப் பாடநெறியில் உங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

## 2022/2023 கல்வியாண்டுக்காக விண்ணப்பிக்கக்கூடிய பாடநெறிகள்

### பொறியியல் கற்கைபீடம்

- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Power Systems
- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Telecommunication
- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Engineering Management
- Bachelor of Science (Hons) in Engineering in Information and Communication Engineering (Software Engineering)
- Bachelor of Science (Hons) in Engineering in Civil Engineering
- Bachelor of Science (Hons) in Engineering in Mechatronics Engineering

### தொழில்நுட்ப கற்கைபீடம்

- Bachelor of Technology (Hons) in Electronics
- Bachelor of Technology (Hons) in Agricultural Technology
- Bachelor of Technology (Hons) in Environmental Technology
- Bachelor of Science in Textile and Clothing Technology
- Bachelor of Science in Fashion Merchandise Management

### முகாமைத்துவ கற்கைபீடம்

- Bachelor of Business Management (Hons) in Accounting and Finance
- Bachelor of Business Management (Hons) in Human Resource Management
- Bachelor of Business Management (Hons) in Marketing
- Bachelor of Business Management (Hons) in Operations Management
- Bachelor of Business Management (Hons) in Supply Chain Management
- Bachelor of Science (Hons) in E-Tourism and Digital Marketing
- Bachelor of Science (General) Tourism & Hospitality Management

### கணனியியல், தகவல் தொழில்நுட்பம் கற்கைபீடம்

- Bachelor of Science (Hons) in Software Engineering
- Bachelor of Science (Hons) in Cloud Computing
- Bachelor of Science (Hons) in Cyber Security
- Bachelor of Science (Hons) in Data Science

### விஞ்ஞான கற்கைபீடம்

- Bachelor of Science Honours in Biosystems Engineering.

### சங்கீத கற்கைபீடம்

- Bachelor of Music (Honours)

**SCAN QR For Online Application**

### ஒக்டோபர் 08

| இடம் | நேரம் | நிலையம் |
|---|---|---|
| குருநாகல் | 9AM to 12PM | District Scout Headquarters |
| தங்காலை | 9AM to 12PM | Guest House |
| கம்பஹா | 2PM to 5PM | Viana Grand Hotel |
| களுத்துறை | 9AM to 12PM | Townhall |
| கண்டி | 2PM to 5PM | Queens Hotel |
| யாழ்ப்பாணம் | 9AM to 12PM | Tilko Hotel |
| திருகோணமலை | 3PM to 6PM | Kulackkootam Auditorium & Training Centre Trincomale UC |

### ஒக்டோபர் 09

| இடம் | நேரம் | நிலையம் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 9AM to 12PM | Townhall |
| பதுளை | 9AM to 12 PM | The Heritage Resort |
| காலி | 2PMto 5PM | Hall de Galle |
| கல்முனை | 9AM to 12 PM | The Azath Plaza |
| அனுராதபுரம் | 9AM to 12PM | New Town Hall |
| மாத்தறை | 9AM to 12PM | Co-operative Auditorium |
| பாண்டராவளை | 2PM to 5PM | Thakshila Higher Eduation Center |
| மட்டக்களப்பு | 1PM to 5PM | YMCA |

### ஒக்டோபர் 10

| இடம் | நேரம் | நிலையம் |
|---|---|---|
| நுவரேலியா | 9AM to 12PM | Araliya Red |

ENTECH இளைஞர் சிறப்பு புலமைப் பரிசிலுக்கு தகைமை பெற்றுள்ள மாணவர்களுக்கு அன்றைய தினம் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ள

விளையாட்டு மற்றும் அழகியற்கலைசார் கொண்டுள்ள, சமூக நலனோம்புகை நடவடிக்கைகள் மற்றும் சங்கங்கள் மற்றும் அமைப்புகளில் சிறந்து விளங்கும் செயற்பாடுகளில்

SLTC ஆராய்ச்சி பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் நீண்டகால கடன் வசதிகள் தொடர்பில் அறிவுறுத்துதல்.

வெளிநாட்டு கல்வி வாய்ப்புகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

விடுதி வசதிகள் தொடர்பிலான விபரங்களை வழங்குதலும் விடுதி வசதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்பினை வழங்குதலும்.

www.sltc.ac.lk

0112 100 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதஸ்வர, தவில் கச்சேரியுடன் நாகர்கோவிலில் கப்பல் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 9
வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. கப்பல் திருவிழாவன்று ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்களான அளவையூர் கேதீஸ்வரன், தொல்புரம் வழக்கம்பரை சிவகுமார் குழுவினர், ஈழநல்லூர் பாலமுருகன் குழுவினர், கோண்டாவில் குமரன் குழுவினர் , கோண்டாவில் நாகதீபன், சுதுமலை மது, மல்லாகம் பானு, சாவகச்சேரி சித்தார்த்தன் பிரதித்தன் குழுவினரின் நாதஸ்வர இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அத்துடன், ஈழத்தின் புகழ்பூத்த தவில் வித்துவான்களான அளவெட்டி உதயசங்கர், உடுப்பிட்டி சதீஸ்குமார் (குட்டி), மானிப்பாய் நந்தன் உடுப்பிட்டி தட்சிணா, ஈழநல்லூர் செந்தில், தொண்டைமானாறு துளசி ஆகியோரும் தவில் கச்சேரி வழங்கவுள்ளனர்.

இரவு நிகழ்ச்சியாக ஈழநல்லூர் அருணா இசைக்குழுவின் இன்னிசைக்கச்சேரியும் இம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கப்பல் ஆட்டம் நிகழ்வு இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சட்டத்தரணி கே.வி.தவராசா எழுதிய



# 'கௌரி: நீதியின் குரல்' நூல் வெளியிடப்பட்டது

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா எழுதிய 'கௌரி: நீதியின் குரல்' புத்தக வெளியீட்டு விழாவும் அமரர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் ஒரு வருட ஞாபகார்த்த நினைவேந்தல் நிகழ்வும் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை கொழும்பு வெள்ளவத்தை குளோபல்வர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்டமா அதிபர் சஞ்ஜே ராஜரத்னம் உட்பட முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சாகல ரத்நாயக்க, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். பி.திஸாநாயக்க, ராஜித சேனாரத்ன, வடமாகாண அவைத்தலைவர் சி.வீ. கே.சிவஞானம் உட்பட நீதியரசர்கள், மேல்நீதிமன்ற நீதிபதிகள் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா தலைமையுரையாற்றினார்.

## போக்குவரத்து திணைக்களத்தால்

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 9
வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகிவை இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 9.30 மணிதொடக்கம் பி.ப 4.30 மணி வரை கைதடியிலுள்ள வடக்கு மாகாணசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பல சேவைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

அதன்படி, வாசித்தலில், எழுதுதலில், விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளலும், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், தனிப்பட்ட மோட்டார் கோச்சினை ஓமினிபஸ்ஸாக மாற்றம் செய்தல், வாகன பதிவுப்புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகன இலக்கத்தகடு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள், வாகன உடமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல், 2014/2015 ஆம் ஆண்டு செயற்றிட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாகனங்களின் நிபந்தனைகளை நீக்குதல், வாகன நிறைசான்றிதழ் பெற்றுக் கொள்ளல், இதுவரை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாத நிலுவைகள், வாகன வருமானவரி தொடர்பான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-27)

# பி.பி.எல். கிண்ண இறுதிப்போட்டி இன்று

'தமிழி' அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் இணைந்து நடத்தப்படும் பி.பி.எல். வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது, இறுதிப்போட்டியில் சுண்டிக்குளி ஈகிள்ஸ் அணியை எதிர்த்து ஜப்னா றோயல்ஸ் அணி மோதவுள்ளது. (எ)

# பண்பாட்டு பெருவிழா

கிளிநொச்சி, ஒக். 9
கரைச்சிப் பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டு பண்பாட்டுப் பெருவிழா, நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலய முன்றிலில் பண்பாட்டுப் பவனியுடன் ஆரம்பித்து கலைநிகழ்வுகள் பசுமைப்பூங்காவில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-14)

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 9
உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் சிறுவர்தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீகீதா சசிவர்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9
இணுவில் ஒன்றியம், பெரிய பிரித்தானியாவின் ஸ்தாபகர்களில் ஒருவரான கந்தையா விவேகானந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இணுவில் ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வில் பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (எ-14)

# பரிசளிப்பு நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஒக். 9
மிருசுவில், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தின் பரிசில் தின விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்துகொண்டார். (எ-14,9)

## நினைவுப்பேருரையும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 9
மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் மு.அருளையா, ஆசிரியர் தவமலர் அருளையா ஞாபகார்த்த நினைவுப்பேருரையும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ-14)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஊரெழு பாரதி முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாரதி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாரதி சனசமூக நிலையத் தலைவர் சி.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## வடக்கு மாகாண மெய்வல்லுநர் மானிப்பாய் இந்து இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 9
2022 ஆம் ஆண்டு வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் ஆண்கள் பிரிவில் 4 புள்ளிகள் பெற்று முதன் முறையாக இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது மானிப்பாய் இந்துக்கல்லூரி.

3 தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 5 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைப் பெற்றதோடு 18 வயதில் சிறந்த மெய்வல்லுநர் வீரராக கல்லூரி மாணவன் ஏ.சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் 13 வயலங்களில் வலிகாமம் வலயம் முதலாம் இடத்தைப் பெற மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புள்ளிகளும் கணிசமாக உதவியமை குறிப்பிடத்தக்கது. (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281**

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி (A9) மாம்பழம் சந்திக்கும்
நாவலர் வீதிக்கும் அருகாமையில் நான்கு அறைகள்
கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

**077 308 0465**

## தேவை

A - D சாரதி அனுமதிப் பத்திரம்
உள்ள சாரதி உடன் தேவை.
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

**077 789 0398, 021 223 0235**

## மணமகன் தேவை

1990 ஆம் ஆண்டு பிறந்த மூலம் நட்சத்திரம் விவாகரத்தான மணமகளுக்கு மணமகன் தேவை. ஐரோப்பிய நாடுகள் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை உள்நாடும் எதிர்பார்ப்பு.

**074 385 5548** (CS 46964) (3/6)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீடொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (CR 38243) (3/6)

**தொடர்பு : 076 128 3990**

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:

அருள்மிகு

## காளி அம்பாள் தேவஸ்தானம்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கேதார கௌரி விரதம்

விரதாரம்பம்
05.10.2022 புதன்கிழமை

விரதபூர்த்தி
25.10.2022 செவ்வாய்க்கிழமை

கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை தற்போது பதிவு செய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவஸ்தான
ஆதீனகர்த்தாக்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சொக்கலிங்கம் முருகையா



பிறப்பு 31.12.1931 — இறப்பு 07.10.2022

எமது பாடசாலை ஆசிரியர்கள் **திருமதி. சு.ஜெயரூபன்** **திருமதி உ. தமிழ்மாறன்** ஆகியோரின் அன்புத் தந்தையார் கடந்த (07.10.2022) அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 46976) (3/6)

பாடசாலை சமூகம்
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

---

## மரண அறிவித்தல்



திருமதி

### சிவபுண்ணியம் றஞ்சிதமலர்

யாழ். இளவாலை மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் மாரீசன் கூடலை வதிவிடமாகவும் கொண்ட சிவபுண்ணியம் றஞ்சிதமலர் நேற்று (08.10.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபுண்ணியம் அவர்களின் அன்பு மனைவியும், விஜயலக்ஷ்மி (ஓய்வுநிலை ஆசிரியை), காலஞ்சென்றவர் களான தேவகுமார், சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மாரீசன் கூடல் இளவாலையில் உள்ள அவரது சகோதரர் இல்லத்தில் (தி. சண்முகராசா) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 21150) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

---

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுநிறுவனம் (ஓஹான் வவுனியா)

வவுனியாமாவட்டம்

## ஒப்பந்த வேலைக்கான விலைமனுக் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் பயனாளிகளுக்காக 22 குழாய் கிணறுகள் அமைப்பதற்காக அனுபவமும் தகைமையுமுள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஓஹான் பெறுகைக் குழுவினால் கோரப்படுகின்றன.

| இல | விலைமனுவிபரம் | எண்ணிக்கை / அளவு |
|---|---|---|
| 01 | குழாய்க்கிணறுகள் அமைத்தல் | 22 |
| 02 | நீர்பம்பிமற்றும் இணைப்புக்கள் | 22 |

01. விலைமனுக்கோரல் போட்டிரீதியானநடைமுறையைப் பின்பற்றிநடைபெறும்
02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிகளாக, மூன்று வருடத்திற்கு மேற்பட்ட வெற்றிகரமானஅனுபவத்தைக் கொண்டவராகவும், அபகீர்த்தியான பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. ஆர்வமும் தகுதியுமுள்ளசேவைவழங்குனர்கள்மேலதிகவிபரங்களைஓஹான், 2ஆம் ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி, தவசிகுளம், வவுனியா என்ற முகவரியிலுள்ள எமது அலுவலகத்தில் அல்லது 077-7343531 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக திங்கள் முதல் வெள்ளி வரை (மு.ப 8.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை)பெற்றுக் கொள்ளலாம்.
04. 12.10.2022 முதல் 19.10.2022 வரை பி.ப 3.00மணிக்கு முன்னதாக திங்கள் முதல் வெள்ளி வரை மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.2.000.00 செலுத்தியியாபாரபதிவுச் சான்றிதழ் சகிதம் எழுத்து மூல கோரிக்கை ஒன்றினூடாக விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. விலைமனுக்கள் அவற்றைத் திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்
06. அனைத்து விண்ணப்பங்களுடனும் ரூபா ஐம்பதாயிரம் இலங்கை ரூபா விற்கான வங்கி பிணை முறியொன்று இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அப்பிணைமுறியானதுவிலைமனுக்கோரல் மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 20.10.2022மு.ப 10.00 மணி வரையுமாகும். நேரில் அல்லது பதிவுத்தபால் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்கள் மூடிய கடித உறையிலிடப்பட்டு நேரில் அல்லது ஓஹான், 2ஆம் ஒழுங்கை, பாலவிநாயகர்வீதி, தவசிகுளம், வவுனியா என்ற நிறுவன தபால் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். உறையின் வலது பக்க மேல் மூலையில் "குழாய்க்கிணறு அமைத்தல் - 2022"என்ற சொற்பதம் குறிப்பிடப்படவேண்டும். அவை அன்றையதினம் உடனடியாகவே சமூகமளித்த பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எவ்வேளையிலும் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளுவதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிப்பதற்கும் அதனால் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டைச் செலுத்தாமலும் காரணத்தை அறிவிக்காமலும் இருப்பதற்கான அதிகாரத்தைப் பெறுகைக்குழு கொண்டுள்ளது.

தலைவர்
ஓஹான்,
வவுனியா.

(CS 1036) (3/6)

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 06 . 1950 — இறப்பு 07 . 10 . 2022

திருமதி

### லோகராஜா புஸ்பமாலா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது தையிட்டி விக்னேஸ்வரா வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லோகராஜா புஸ்பமாலா கடந்த (07.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பையா லோகராஜவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு வளர்ப்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து ஆகியோரின் அன்பு மருமகளும், லாவண்யனின் பாசமிகு தாயாரும், சிந்துஜாவின் அன்பு மாமியாரும் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) சங்கவனின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், இராசமலர், அழகராசா, நேசமலர் மற்றும் பாலசிங்கம், யோகமலர், செல்வராசா, ரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை, யோகராணி மற்றும் தர்மலிங்கம் தம்பிராசா, செல்வராணி, புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (தையிட்டி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவளை சந்தி,
விக்னேஸ்வரா வீதி,
தையிட்டி, காங்கேசன்துறை.

(cs 38209) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
076 860 6652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

* மின் இணைப்பாளர் - Electrician
* குழாய் நுட்பவியலாளர்- Plumber
* சுத்திகரிப்பு பணியாளர் - Maintenance Staff

அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : **071 411 5000**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலரும் உத்தியோகத்தர் நலன்புரிச் சங்க தலைவருமாகிய **திரு.நடராசா பிரணவன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் நடராசா குணபூசனி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 28.12.1947 — மறைவு 07.10.2022

பிரிவால் துயருறும்
பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம் - வேலணை

## பொது அற்றோனித்தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 12ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2020 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு Germany, Bremen ஐச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு WOLF LESCHMANN முகதாவில் நிறைவேற்றப்பட்ட பொது அற்றோனித்தத்துவ பத்திரமானது, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த **அருட்சோதி சாந்தினி (தே.அ.அ.இ. 596780466V)** என்பவரின் பெயரில் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த தற்போது Bremen, Germany இல் வசிக்கும் **செல்லத்துரை அரியநாயகம் மற்றும் ரமணி அரியநாயகம்** ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோனித்தத்துவப்பத்திரம் 01ஆம் திகதி ஐப்பசி மாதம் 2022 ஆம் ஆண்டு முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோனித்தத் துவகாரியால் மேற்குறிப்பிட்ட அற்றோனித்தத்துவ பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

**செல்லத்துரை அரியநாயகம்**
**மற்றும் ரமணி அரியநாயகம்**

(CS 46867)(3/6)

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 03 . 1937 — உதிர்வு 02 . 10 . 2022



### திருமதி அமிர்தலிங்கம் புவனேஸ்வரி (பெரியம்மா)

யாழ். கந்தர்மடம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், 65/5, யாழ் இந்து மகளிர் ஒழுங்கையில் வசித்தவரும், தற்போது கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் புவனேஸ்வரி அவர்கள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு பரிபூரணம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், தயாளினி, காலஞ்சென்ற யசோதன் (ராசன்), நளாயினி (ஜெயா), தர்சினி (தர்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதன் (சிவா), யசோதா (யசோ), சிறினிவாசன் (சிறி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷர்மிளா - சதீசன், ரமியா, திவ்யா, சங்கீதா, அபிதா, ஜக்சன், சுபீந்தர் (சாயி), டீப்தி (சக்தி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சபீஸ்னா, சஜீனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற கனகசபை மற்றும் சதாசிவம் (குஞ்சன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம், பஞ்சலிங்கம், பத்மாவதி மற்றும் பரமசிவராசா, நவரத்தினம், மகேஸ்வரி, கனகமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, தவமணி, கணேஸ்வரி, இரத்தினசிங்கம், யோகநாதன், மற்றும் கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**விவிந்தன் (பேறாமகன்)**

(CR 38239) (3/6)

## நாகபூஷணி திருமண சேவை

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**077 138 7596, 071 999 9306**

## பெண் உதவிக்கணக்காளர் தேவை

யாழ்நகரின் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு உதவிக் கணக்காளர் ஒருவர் தேவைப்படுகின்றார் (G.C.E. O/L, A/L) வர்த்தகம் கற்றவர்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொண்டு வார நாள்களில் முற்பகல் 10.00 - பிற்பகல் 4.00 மணிவரை நேரில் வருகைதரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**T.P.: 077 623 1295**

## வேலையாள்கள் தேவை

* **சுத்திகரிப்பாளர்**

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

* **சமையல் உதவியாளர் தேவை**

நோயாளர்களுக்கு ஏற்றவாறு சமைக்கக்கூடிய பெண் விண்ணப்பிக்க முடியும்

## நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்

Institute of Medical Sciences - Green Memorial Hospital மானிப்பாய்

தொடர்புகளுக்கு

**0760477106, 0212256335**

## கடை உடனடி விற்பனைக்கு

கிளிநொச்சி A9 வீதி 155ஆம் கட்டைச் சந்தியில் 182 அடி நீளமும், 36 அடி அகலமும் கொண்ட விசாலமான கடை விற்பனைக்கு உண்டு.




**077 443 1114**
**071 115 1114**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 28 . 12 . 1947 — மறைவு 07 . 10 . 2022



யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் **திரு.நடராசா நர்த்தனன்** அவர்களின் பாசமிகு தாயார்

### நடராசா குணபூஷணி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**
**யாழ்ப்பாணம்.**

(CS 21156) 1/6

## 200 கிலோ...

ஈரானிய மீன்பிடிக் கப்பல் ஒன்று, இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் மற்றும் இந்திய கடற்படையின் கூட்டு நடவடிக்கையில் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கப்பலுடன் ஈரானியர்கள் ஆறு பேரை இந்திய படையினர், கேரளாவின் மட்டஞ்சேரி துறைமுகத்துக்கு அழைத்து வந்துள்ளதாக இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத் துணை இயக்குநர் சஞ்சய் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட விசாரணையில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் ஆப்கானிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து இலங்கையின் கப்பல் ஒன்றுக்கு மேலும் சரக்குகளை வழங்குவதற்காக கப்பல் இந்திய கடற்பரப்புக்கு புறப்பட்ட போதே இந்திய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக் கப்பலை அடையாளம் கண்டு இடைமறிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-இ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க **உடனே பதியுங்கள்**

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை லட்சக்கணக்கானோர் விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

**0768226244**

## தேவை

புடைவை கடைக்கு பெண் வேலையாளர் தேவை.

திருநெல்வேலிக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **076 390 7969**

## வேலையாட்கள் தேவை

மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை. வயது : 18-25 வரை (யாழ். நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது)

**074 1472 445**

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள SOLAR PANEL விற்பனைக்கு BP INDIAN

**077 179 2577**

## விற்பனைக்கு

நல்ல தரமான Lion Shepered குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளவும்.

இடம்: ஆனைக்கோட்டை.

தொடர்புகளுக்கு: **0773117275, 0750352563**

## வேலையாட்கள் தேவை

A9 வீதி முறிகண்டியில் இயங்கும் பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

காசாளர், சிட்டை எழுதுனர், உணவு உற்பத்தியாளர், உணவு பரிமாறுபவர், உணவு பொதி செய்வோர், சுத்திகரிப்பாளர் போன்ற பதவிகளுக்கு ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **077 38 66 250**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 05 - 1934



மறைவு 07 - 10 - 2022

## சாணையன் பொன்னையா

(ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்)

கைதடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கையும் சுவிஸ் நாட்டையும் வசிப்பிடமாகவும் கொண்ட சாணையன் பொன்னையா கடந்த (07.10.2022) வெள்ளிக் கிழமை மட்டுவிலில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அமரர் சரஸ்வதியின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான சாணையன் - நாகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான சின்னப்பொடி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ரவி (ஜேர்மன்), ராதா (சுவிஸ்), ஈசன் (சுவிஸ்), நாதன் (சுவிஸ்), வனி (சுவிஸ்) ஆகி யோரின் அன்புத் தந்தையும் ,ஜெயா (ஜேர்மன்), துரைசிங்கம் (சுவிஸ்), சுனீத்ரா (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), புலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, நாகமுத்து, மீனாட்சி, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும் அமரர் தங்கம்மாவின் மைத்துனரும், பிரகாஷ் (ஜேர்மன்), பிரியங்கா (ஜேர்மன்), பிரியங்கன் (ஜேர்மன்), நர்மதன் (சுவிஸ்), நவீன் (சுவிஸ்), நதீசன் (சுவிஸ்), யனோஷா (சுவிஸ்) , சனுஜன் (சுவிஸ்), ஆகியோரின் அப்பப்பாவும், வேணுஷா (சுவிஸ்) , அனுஷா (சுவிஸ்) , பூஜா (சுவிஸ்), ஆதிஸ் (சுவிஸ்) ஆகியோரின் அம்மப்பாவும், பவரூபனின் (சுவிஸ்) பேரனும், விசானி (சுவிஸ்) அவர்களின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை (10.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக சின்னத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**077 070 1604**

(CS 21143 ) (3/6)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 - 08 - 1946



இறப்பு 09 - 10 - 2021

## அமரர் பற்றிக் றோஸ்மலர்

(வேவி)

ஆயிரம் உறவுகள்
அவனியில் இருந்தாலும்
அம்மாவின் உறவு போல்
ஆருளர் இவ்வுலகில்
அழியாத நினைவுகளுடன்
ஆண்டு ஒன்றில்.....

**பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**149/2, கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்.**

(CS 21153) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் · 31 · 12 · 1931



மறைவு · 07 · 10 · 2022

## சொக்கலிங்கம் முருகையா

(நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்னாள் சேவையாளர்)

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூரை நிரந்தர வதிவிடமாகவும் கோப்பாய் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு. சொக்கலிங்கம் முருகையா அவர்கள் கடந்த (07.10.2022) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் கண்மணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் வேதாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்பாள், உண்ணாமலை, அமிர்தம் ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியம், நடராசா, செல்லத்துரை, மாங்கையர்க்கரசி, அசுவத்தம்மா ஆகியோரின் மைத்துனரும், ஜெ.சுகந்தா (ஆசிரியை-யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மதனராசா, த.உதயசிறி (ஆசிரியை - யா/புனித பொஸ்கோ வித்தியாலயம்), காந்தராஜா (பாஸ்ரர்-அப்போஸ்த திருச்சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரூபன், ரூபகௌரி (ஆசிரியை-யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), தமிழ்மாறன், மைதிலி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துலக்ஷிகா, நிக்ஷலா, கேசகி, கம்ஷிகா, தேனுஜன், தரங்கினியன், தமிழ்க்குன்றன், சத்தியப்பிரியன், ஸைரோசன், கிறேசன், கிளப்சன், இவாஞ்சலின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கோப்பாய் சந்தி,**
**கோப்பாய்.**

**077 522 0785**
**077 6326 219**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21180) 1/6

# மரண அறிவித்தல்

மண்ணில் 12 · 07 · 1942



விண்ணில் 06 · 10 · 2022

## திருமதி சூசைமுத்து இராசமணி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வளாக ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சூசைமுத்து இராசமணி கடந்த (06.10.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் நாகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளை மற்றும் யோகமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற யேசுராசா மற்றும் மேரி (கிளி, ஒஸ்ரியா), ரவிராசா (ஜேர்மனி), ஜெயராசா (சுவிஸ்), ஜீவராசா, றொபின்ராசா (ஜேர்மனி), சார்ல்ஸ் நிமலராசா (கண்ணன் - ஜேர்மனி), சுகிர்தராசா (சுதன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறில் (ஒஸ்ரியா), கங்கா (ஜேர்மனி), சுதா (சுவிஸ்), தனுஷா, கார்த்திகா (ஜேர்மனி), கவி (ஜேர்மனி), ஜானகி ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோட், மைக்கல், ஸ்ரீபன், டாவிட், நென்சி, யூலியான், மெலிஷா, எஸ்ரோன், எக்லோன், ஜஸ்லினா, நிஸ்வேட், றிக்காடோ, றொமீரா, ஷலினா, ஷாயிறா, தமித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எய்டன், எலைக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வளாக வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**077[illegible] 506 488, 077 666 5854**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 21161) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியாக்கியிருந்தால்...

புலம்பினார். போராட்டக்காரர்களால் தமது அலுவலகம் எரிக்கப்பட்ட விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுக்கொண்டிருக்கையிலேயே அவர் இவ்வாறு விம்மி அழுத்தார்.

'ஒன்றாக எழுவோம், களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளின்கீழ் பெரமுனக் கட்சியின் கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் களுத்துறையிலுள்ள எரிக்கப்பட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய ரோஹித அபேகுணவர்த்தன,

'போராட்டக்காரர்களால் இந்த அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. நான்கு சுவர்களே எஞ்சின. அதுவும் டோசர் செய்யப்பட்டது. அதிலும் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. அதாவது மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது செய்த விடயங்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வந்த செய்திகள் ஆவணமாக தொகுக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணம் மட்டும் எரியவில்லை' எனக் குறிப்பிட்டு, சில வேளை இனி எரிக்கப்படும் என்பதால் அதனை மஹிந்த ராஜபக்சவிடமே ஒப்படைக்கின்றேன் என ஆவணத்தை மஹிந்தவிடம் கையளித்தார் ரோஹித.

அதன் பின்னர் உரையை தொடர்ந்த அவர், எனது தாயும் தெய்வாதீனமாகவே உயிர்தப்பினார் எனக்குறிப்பிடுகையில் கண்ணீர் கொட்டியது. சிறிதுநேரத்தின் பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு உரையை தொடர்ந்தார்.

'என்ன மாதிரியான ஒரு பயங்கரவாதச் செயல் இது. மஹிந்த ராஜபக்சவின் பெற்றோரின் நினைவிடமும் அழிக்கப்பட்டது. வலி, வேதனை எமக்கு உள்ளது. எனவே, மொட்டுக் கட்சியை வெற்றிநடை போட வைப்போம். மஹிந்த ராஜபக்ச மூன்றாவது முறை ஜனாதிபதி ஆகியிருந்தால் எமக்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்காது என்றார் ரோஹித அபேகுணவர்த்தன. (அ-ஒ-44)

## எரித்த..

'நெருப்பிலே போட்டாலும் மீண்டெழுந்து பறக்கும் பீனிக்ஸ் பறவைபோல சிறிலங்கா பொதுஜன பெரமுனவும், ராஜபக்சக்களும் மீண்டெழுவார்கள். மஹிந்த ராஜபக்ச தலைமையில் மொட்டுக் கட்சி ஆட்சி தொடரும். தேவையான நேரங்களில் உரிய அஸ்திரங்கள் பயன்படுத்தப்படும்' என்றும் கூட்டத்தில் சூளுரைக்கப்பட்டது.

அத்துடன், மொட்டுக் கட்சி ஆட்சிமீது மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாவதற்கு விமல், கம்மன்பில, டலஸ் போன்ற உள்ளகச் சதிகாரர்களும் பிரதான பங்கை வகித்தனர் என விமர்சனக் கணைகள் தொடுக்கப்பட்டதுடன், இரசாயன உரப் பாவனைக்கு தடை விதிப்பதற்கு கோத்தாபய ராஜபக்ச எடுத்த முடிவும் பின்னடைவுக்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் மக்கள் சந்திப்பொன்று, 'ஒன்றாக எழுவோம், களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளின்கீழ் களுத்துறையிலுள்ள ரோஹித அபேகுணவர்த்தனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. மே - 9 - மக்களின் தாக்குதல்கள் வீடெரிப்பு சம்பவத்துக்குப் பிறகு மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்கள் பொதுவெளியில் ஒரே மேடையில் சங்கமித்தது இதுவே முதன்முறையாகும். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, நாமல் ராஜபக்ச, பவித்ராதேவி வன்னியாராச்சி, சாகர காரியவசம், சஞ்சீவ எதிரிமான்ன உள்ளிட்ட மொட்டுக் கட்சி எம்.பிக்கள் நிகழ்வில் உரையாற்றினர்.

இதில் குறிப்பாக ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம் ஆகியோர், விமல், கம்மன்பில உள்ளிட்டோரை கடுமையாகச் சாடினர். சூழ்ச்சிக்காரர்கள் எனவும் முத்திரை குத்தினர். டலஸ் மீது சொற்கணால் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்கள் போராட்டக்காரர்கள் மீது சொற்கணைகளைத் தொடுத்தனர். அதேபோல இரசாயன உரம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்திருந்த முடிவை பவித்ராதேவி சாடினார். இனி யார் ஜனாதிபதியானாலும், தம்மையும், கட்சியையும் வழிநடத்த மஹிந்த ராஜபக்ச அவசியம் எனவும் பவித்ரா கேட்டுக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்ச மூன்றாவது முறையாக ஜனாதிபதி ஆகியிருந்தால் இந்நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும், சுய விமர்சனத்துடன், தவறுகளைத் திருத்திக்கொண்டு பீனிக்ஸ் பறவைபோல மொட்டுக் கட்சியும், ராஜபக்சக்களும் மீண்டெழுவார்கள் என எதிரிமான்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் சூளுரைத்தனர்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்சவின் காலை வாரவில்லை எனவும், மஹிந்த பதவி விலகியதால்தான் கோத்தாவும் வீடு செல்ல நேரிட்டது எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-44)

## இலங்கைக்கு...

ஐக்கிய நாடுகள் சபையும், பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட அதன் நாடுகளும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் இல்லை' - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழ் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வரவேற்கின்றோம்.

சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும், விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இந்தத் தீர்மானம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசும், அதன் படைகளும் எதிர்கொண்டுள்ளன. எனவே, குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இவை நிறைவேற ஐ.நாவையும், அதன் உறுப்பு நாடுகளையும் தமிழர்கள் நம்பியுள்ளார்கள் - என்றார். (அ-ஒ-22)

## யாழ்...

கொடுப்பனவை வழங்கலை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்கு தாம் தயாராகி வருவதாக உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

மாநகர கட்டளைச் சட்டத்தில் கூட்ட வரவு பதிவேட்டில் கையொப்பமிட்டால் கொடுப்பனவு வழங்கப்படவேண்டுமென்று உள்ள நிலையில் அதற்கு மாறாக முதல்வர் வி.மணிவண்ணன் செயற்படுகின்றார் என்று அவர்கள் முறைப்பாடு செய்யவுள்ளனரெனவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் 27ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மாதாந்தக் கூட்டம் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் வகையில் முதல்வரும், ஆணையாளரும் ஜப்பானிய தூதரக வாகன விடயத்தில் நடந்துகொண்டமையைக் குறித்து அதிருப்தியை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நடந்த விடயம் தவறு என்று முதல்வரும், ஆணையாளரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினர். எனினும் முதல்வரோ, ஆணையாளரோ அது தொடர்பில் வருத்தம் தெரிவிக்காத காரணத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு , ஈ.பி.டி.பி. ,சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர். இதனால் கூட்டத்துக்கான நிறைவெண் இல்லாத காரணத்தால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (மணிவண்ணன் அணியினர்) உறுப்பினர்களுடன் மட்டும் கூட்டத்தை நடத்த முடியாத நிலையில் முதல்வர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

இது தொடர்பில் முதல்வர் வி.மணிவண்ணனிடம் கேட்டபோது, கூட்டத்தில் முழுமையாகப் பங்குபற்றியவர்களுக்கு உரிய முறையில் வேதனம் வழங்கப்படும் என்று பதிலளித்தார். (அ-ஒ-5-26)

## இணைந்த...

நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. அதற்கு நாம் எப்போதும் தயார். எமது சமூகத்துக்கும் நன்மை பயக்கும் எந்தவிதமான திட்டத்துக்கு தயக்கம் காட்டப்போவதில்லை - இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

இந்தியன் இன்ஸ்ரியூட் ஒப்ரெக்னோலஜி யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் உடன்பாடு மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவது தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பில்பல்கலைக்கழகத்துணைவேந்தரிடம் நேரில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாங்கள் குறிப்பிட்ட உடன்படிக்கை (இந்தியப் பல்கலைக்கழகம்) தொடர்பில் மின்னஞ்சல் கிடைத்தவுடன் அதனை உடனடியாக முடிவெடுத்துப் பதிலளிக்கும் அதிகாரம் துணைவேந்தருக்குரியதல்ல. கல்விசார் முடிவுகளை இயற்றும் அதிகாரமுடைய மூதவையும், அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து இற்றைப்படுத்தும் ஆளும் அதிகாரமுள்ள பேரவையுமே இவற்றுக்கான தீர்மானத்தை இயற்ற முடியும். தவிர குறித்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட பீடத்தின் பீடாதிபதி குறித்த முன்மொழிவை வரவேற்று, அதற்கான சாத்தியப்பாடுகள் குறித்த நிலைப்பாட்டை தூதரக அதிகாரிகளுக்குப் பதிலளித்துள்ளார்.

தவிர இலங்கையிலுள்ள பல்கலைக்கழக கட்டமைப்பின் படி அரச நிர்வாக்கக் கட்டமைப்பினூடாக கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக வரும் எந்த முன்மொழிவுக்கும் நாங்கள் தயக்கம் காட்டப் போவதில்லை. அவ்வாறு வராத எந்தத் திட்டத்தையும் நாம் முன்னெடுக்கமுடியாது. எமது சமூகத்துக்கு முறையாகக் கிடைக்கும் எந்த நன்மையையும் தட்டிக் கழிக்கப் போவதில்லை.

எந்தத் தூதரகமோ, எந்த சேவை நோக்குடைய நிறுவனங்களோ முறையான வழிமுறைகளினூடாக தமது முன்மொழிவுகளைத் தந்தாலும் அவற்றை அந்தந்த துறைகளின் ஊடாக வழக்கமான நடைமுறைகளுனூடாகப் பெற்றுக் கொள்வது வழமை. சீனத் தூதுவரின் புலமைப் பரிசில் கூட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக 2016 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இம்முறை அந்தத் திட்டத்துக்குப் பொறுப்பானவர்களே அந்த உதவியை சீனத்தூதரகத்தில் பெற ஏற்பாடாகியிருந்தது. தேசியப் பரீட்சைக் கடமைகளுக்காக கொழும்பு சென்றிருந்த நான், அன்றைய தினம் அங்கு செல்லக்கூடிய நிலையில் இருந்ததால் எமது அலுவலர்களின் அழைப்பின் பேரிலேயே அவர்களுடன் சென்றேன். இதனை அரசியலாகப் பார்ப்பது எனக்கு ஆச்சரியமளிக்கிறது - என்றுள்ளார்.

(அ-ஒ-5)

## வல்லிபுரக்...

கிடைக்கப்பெற்றுள்ளன. அதிகளவான பக்கதர்கள் கூடியிருந்த காலை 8 மணிக்கும் ஒரு மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். (அ-ஒ-26)

## எங்களின்...

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச அறிவித்தார்.

'ஒன்றாக எழுவோம், களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளின்கீழ் களுத்துறையில் நேற்று நடைபெற்ற மொட்டுக் கட்சி கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மஹிந்த இவ்வாறு அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இன்று பல சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தாலும் அவற்றை எதிர்கொள்வதற்குரிய சக்தி எம் வசம் உள்ளது. எனவே, மக்களின் தேவை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதே எமது கடமையாகவுள்ளது. அதற்கான நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. எனவே, நாம் ஒன்றிணைந்து பயணிப்போம்.

ரணில் விக்கிரமசிங்கவை அன்று நாம் யூ.என்.பி.க்காரன் என விமர்சித்தோம். இன்று அவர் எம் பக்கம் உள்ளார். அவர் சரியான பாதைக்கு திரும்பிவிட்டார் என நம்புகின்றேன். நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி இந்தப்பயணத்தை தொடருவோம் - என்றார். (அ-ஒ-44)

## மின்...

65 ரூபாவாகவுள்ள மின்சார அலகு ஒன்றுக்கான கட்டணம் 32 ரூபாவாக குறைக்கப்படும் என அதன் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது மதத் தலங்களில் ஏற்பட்டுள்ள மின்சாரக் கட்டண பிரச்சினைக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அவர் விவரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

Love Birds விற்பனைக்கு உண்டு.

(CS 40869)(3/6) 074 112 3353

## சமையலாளர் தேவை

சிங்கப்பூரில் தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை செய்யக்கூடிய 30 - 40 வயதுக் குட்பட்டபெண்பிள்ளை தேவை. சுயவிபரக் கோவையுடன் தொடர்பு கொள்ளவும்.

(CS 40850)(3/6) 076 419 2934

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு electric வேலை, மற்றும் plumbing வேலைகளுக்கு நிரந்தர மான ஆட்கள் தேவை. (CS 21142)(3/6)

தொடர்புகளுக்கு : 077 668 1840

## Hotel Vacancy

❖ Accountant ❖ Waiter

❖ Receptionist

(CS 40857)(3/6) 076 419 2934

## வெள்ளவத்தையில் வீடு விற்பனைக்கு

2023 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவு பெறும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் குடிபுகும் நிலையில் வாஸ்து முறைப்படி அமைய பெற்ற 1150 சதுர அடி கொண்ட வீடு ஒன்று அதனை VAT அதிகரிக்க முதலில் வாங்கிய உரிமையாளர் மேற்படிப் பிற்காக வெளிநாடு (Skill Migration) செல்வதால் பழைய விலையில் அதனை விற்பனை செய்கிறார். தொடர்புகொள்ளவதன் மூலம் உண்மையாக வீட்டை வாங்குபவருக்கு பணம் செலுத்தும் முறையை இலகுவாக்கி தர முடியும். (cs 38238)(2/6)

தொடர்பு: வரதன் 070 227 3884



## இலவச அமெரிக்க லொத்தர் விசா

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.

(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)

2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.

தொடர்புகளுக்கு : 0777554528

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, K.K.S.Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் வீதியில் இரண்டாவது காணி.
- ✓ புத்தூர் சந்தியிலிருந்து 1 KM தூரம்.
- ✓ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 KM தூரம்
- ✓ நன்னீர் ஊற்று
- ✓ நல்ல சூழல்.

தொடர்பு: 077 62 34 204
076 43 65 814

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓ யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்

பார்வையிடும் நேரம்:

- ✓ காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ 4 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ தரகர் தேவையில்லை.
- ✓ A-09 வீதி முகப்புடன் காணி உள்ளது.

தொடர்பு: 077 8748 135
077 4082 649

### மின்சாரம் துண்டித்து விட்டதா?
### மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854

(CS 21133)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## கை மாற்றுவதற்கு அல்லது குத்தகைக்கு அல்லது ஒப்பந்தத்திற்கு

மானிப்பாய, யாழ்வீதியில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் **"சுப்பர்மார்க்ட்"** கை மாற்றுவதற்கோ குத்தகைக்கோ புதிய ஒப்பந்தத்திற்கோ மாற்றுவதற்கு தகுதியானவர்களை எதிர்பார்க்கின்றோம். **(சுப்பர் மார்க்கட்டின் சகல பொருள்களுடன்)** விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 386 5544, 075 231 1544

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

விசேட கழிவு
36 Kg பரலாஸ்டிக் 46500 /=

போலி இரசாயனத்துடன் போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

FINEX **North and East Engineering Jaffna.**

இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம் 077 232 3000

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- **பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**
**077 2417 589**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 04 . 1947



மறைவு 20 . 09 . 2021

யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வள்ளுவர்புரம் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் பத்மநாதன் சாவித்திரி

**திதி :பூரணை சதுர்த்தசி (09.10.2022)**

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அன்னையே
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால், விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் எங்கள் அன்னையை
நாம் என்றென்றும் நினைந்திருப்போம்.
அன்னையின் ஆத்மா இறைபாதம் அடைய பிரார்த்திப்போமாக...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குடும்பத்தினர்**

கண்ணகி ஹாட்வெயர் (பிரைவெட்) லிமிட்டெட்
13ஆம் கட்டை விசுவமடு , முல்லைத்தீவு.

(CS 46952)(3/6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

# சஞ்சீவி

பெண் திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி மாயனாம்—அம்புலியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்துக் கொண்டீரே
கோத்திரத்தில் உள்ள குணம்
— இராம கவிராயர்

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை (09.10.2022) சிகரம் : 119

# ஜெனிவாத் தீர்மானம் 2022:



# தமிழ் அரசியலின் இயலாமை?

○ நிலாந்தன்

**கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியலானது புரோஅக்டிவ் proactive ஆக, அதாவது தானாக ஒன்றைக் கட்டியெழுப்பும் அரசியலாக இல்லை. அது ரியாக்டிவ் reactive ஆகத்தான் அதாவது பதில் வினை யாற்றும் அரசியலாகத் தான் காணப்படுகிறது. அதாவது தேசத்தை நிர்மாணித்தல் என்பது எதிர்த்தரப்புக்கு எதிர்வினை ஆற்றும் தற்காப்பு நிலை அரசியலாகதான் மாறியிருக்கிறது.**

மற்றொரு ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் கேட்டது சரி என்பதை இந்தப்புதிய தீர்மானம் நிரூபித்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து ஜெனிவாவுக்கு ஒரு கூட்டுக்கடிதத்தை அனுப்பின. அதில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை இணைத்தது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான். இது நடந்து 20 மாதங்களாகிவிட்டன. பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் முயற்சியில் மூன்று கட்சிகளும் எதுவரை முன்னேறியுள்ளன?

நடந்து முடிந்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அங்கு போயிருந்தார். அங்கிருந்து அவர் வழங்கிய நேர்காணல்களில் அவர் ஒரு விடயத்தைத் திரும்பத்திரும்ப சுட்டிக்காட்டுகின்றார். அது என்னவெனில், கூட்டமைப்பும் சில புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்தி வருகின்றன என்பதே அது. அதாவது ஜெனிவாத் தீர்மானத்தை முன்கொண்டுவரும் நாடுகளை நோக்கி கூட்டமைப்பு தமிழ்மக்களின் கோரிக்கையை வலிமையாக முன்வைக்கவில்லை என்பது அவருடைய முதலாவது குற்றச்சாட்டு. இரண்டாவது குற்றச்சாட்டு, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளை மையமாகக் கொண்டியங்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சில தொடர்ந்து தத்தமது நாடுகளின் அரசாங்கங்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப செயற்பட்டு வருகின்றன என்பது. அதாவது மேற்படி நாடுகள் ஜெனிவாவில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தமது பூகோள அரசியல் இலக்குகளுக்காக நீர்த்துப்போகச் செய்யும்பொழுது அதுவிடயத்தில் மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு விசுவாசமாக கீழ்படிவாக செயற்படுகின்றன என்ற தொனிப்பட அவர் குற்றம் சாட்டுகிறார்.





ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய ஆட்சிக் காலத்தில், 2015ஆம் ஆண்டு நிலைமாறுகால நீதிக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது தமிழ்த்தரப்பில் கூட்டமைப்பு அந்தத் தீர்மானத்தை ஆதரித்தது. அது நிலைமாறுகால நீதியின் பங்காளியாக மாறியது. அவ்வாறே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சிலவும் நிலைமாறு கால நீதியை ஏற்றுக்கொண்டன. அதேசமயம் இன்னொரு பகுதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தாயகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் நிலைமாறுகால நீதியை ஏற்றுக் கொள்ளவில்லை. அவை இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியைக் கேட்டன.

எனினும், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஐ.நா.வுக்கு அனுப்பிய கூட்டுக் கடிதத்தில் கூட்டமைப்பு ஏனைய இரண்டு கட்சிகளோடு இணைந்து பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்று கேட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று அந்தக்கடிதம் கேட்டிருந்தது. 'நிலைமாறுகால நீதியைப் 'பரிசோதித்தோம். அதில் தோல்வியுற்றுவிட்டோம்' என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்துச் சொன்னார். ஆனால் ஜெனிவாத் தீர்மானத்தின் 'ஸீரோ டிராப்ட்' (பூச்சிய வரைவு) வெளிவந்த பொழுது கூட்டமைப்பு தலைகீழாகி நின்றது. இப்பொழுதும் கூட்டமைப்பு பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டுபோக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கருக்குழு நாடுகளின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவில்லை என்று கஜேந்திரன் குற்றஞ்சாட்டுகிறார். அதுபோலவே அவர் குற்றஞ்சாட்டும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்துவதில்லை என்ற தொனிப்பட அவருடைய குற்றச்சாட்டு அமைகிறது.

இக்குற்றச்சாட்டுகளை தமிழில் அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதும் பலரும் கூட்டமைப்புக்கு எதிராக முன்வைத்து வருகிறார்கள். குடிமக்கள் சமூகங்கள் மத்தியிலும் அவ்வாறான குற்றச்சாட்டுகள் உள்ளன. தவிர காணாமற்போனவர்களுக்கான அமைப்புகள் உட்பட பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளும் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. இந்த விமர்சனங்களின் விளைவாகத்தான் கடந்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்பு அதன் ஆசனங்களில் ஆறை இழந்தது. அதன் ஏகபோகம் சரிந்தது.

ஆனால், அவ்வாறு இழந்த ஆறு ஆசனங்களையும் யார் பெற்றார்கள்? மூன்றே மூன்று ஆசனங்களைத்தான் மாற்று அணி பெற்றது. ஏனைய மூன்று ஆசனங்களும் தமிழ்த்தேசியப் பரப்புக்கு வெளியே போயின. அவ்வாறு மூன்று ஆசனங்கள் தமிழ்த்தேசியப் பரப்புக்கு வெளியே போனதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் கூட்டுப்பொறுப்பை ஏற்கவேண்டும். ஒரு பலமான மாற்று அணியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அந்தக்கட்சியிடம் இன்றுவரை இல்லை. எப்பொழுதும் ஏனைய கட்சிகளைக் குறைகூறி ஏனைய கட்சிகளில் குற்றம்கண்டுபிடித்து தங்களைப் பரிசுத்தர்களாக காட்டிக்கொள்ளும் ஒரு போக்குத்தான் அந்தக்கட்சியிடம் இன்றுவரை உண்டு. அண்மையில் திலீபனின் நினைவுத்தூபி அவமதிக்கப்பட்டபோதும் அந்தக்கட்சி தன் அரசியல் எதிரிகளைத்தான் குற்றஞ்சாட்டியது.

தன் உள் அரசியல் எதிரிகளை குற்றஞ்சாட்டுவது என்பது தேர்தல்மைய அரசியலின் ஒரு பகுதிதான். ஆனால், ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் அதுமட்டுமே தேச நிர்மாணத்தின் பிரதான பகுதியாக அமைய முடியாது. ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியான இனப்படுகொலையால் நீர்த்துப்போன ஒரு மக்கள் கூட்டம். புலப்பெயர்ச்சி, தோல்வி, கூட்டு காயங்கள், காட்டிக்கொடுப்புகள் போன்றவற்றால் தொடர்ந்தும் சிதறிப்போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டம். எனவே இந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் தேர்தல் அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் தமது அரசியல் எதிரிகளை திட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதைவிட முக்கியமாக தாம் சரியெனக் கருதும் ஓர் அரசியல் இலக்கை நோக்கி மக்களைத் திரட்டவேண்டும். ஒரு தேசத் திரட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது தேர்தல்மைய அரசியலை எப்படி ஒரு தேச நிர்மா

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

09 ஒக்ரோபர் 2022



# ரஷ்ய வாக்கெடுப்பும் ஈழத் தமிழர்களும்

## இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் இல்லை

அ.நிக்ஸன்

உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யா பொது வாக்கெடுப்பின் மூலம் இணைத்துக் கொண்டமை தொடர்பாக இந்தியப் பேரரசுக்குப் பெரும் இராஜதந்திரச் சோதனை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து புதுடில்லி தனது நிலைப்பாட்டை விரைவில் விளக்குமென இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஊடகம் ஒன்றுக்குக் கூறியுள்ளார்.

இந்த வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபையும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளும் பகிரங்கமாகக் கண்டித்துள்ள நிலையில், இந்தியா தொடர்ந்தும் அமைதி காத்து வருகின்றது. ரஷ்ய - இந்திய உறவே இதற்குக் காரணம்.

உக்ரைன் நெருக்கடியால் உருவாகிவரும் சர்வதேசச் சூழல் இந்தியாவுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. வரலாற்று ரீதியாக உக்ரைன் விடயத்தில் இந்தியா ரஷ்யாவுடனேயே இருந்துள்ளது.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உக்ரைனின் க்ரீமியா பிரதேசத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டபோதும், இந்தியா அது குறித்து மௌனமாகவே இருந்தது. எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை.

அதேபோன்று கடந்த மாதம் உக்ரைனின் நான்கு பிராந்தியங்கள், பொது வாக்கெடுப்பின் மூலம் ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட விவகாரத்திலும், இந்தியாவின் மௌனம் உலக அளவில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இலங்கை விவகாரத்தில் குறிப்பாக ஈழத்தமிழர்களின் விவகாரத்திலும் இந்தியா 1983 இல் இருந்து சரியான நிலைப்பாட்டை எடுத்திருக்கவில்லை. 1983 இல் இருந்து இந்தியா, அமெரிக்காவுடன் நட்பைப் பேண ஆரம்பித்தமைகூட இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டமே காரணமென்பது அனைவருக்குத் தெரிந்த கதை.

இந்தப் பின்னணியிலேதான் இன்றுவரை கூட ஈழத்தமிழர் விவகாரத்தில் மதில் மேல் பூனை போன்ற இராஜதந்திரத்தையும், சிங்கள ஆட்சியாளர்களுடன் விட்டுக் கொடுத்துச் செல்லுகின்ற காய் நகர்த்தல்களையும் இந்தியா கையாள்கின்றது என்பது பட்டவர்த்தனம்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிக்காது விலகிச் சென்றுள்ளது. 2012 இல் இருந்து இந்தியா இந்த அணுகுமுறையைத்தான் கடைப்பிடித்து வருகின்றது. ஆனாலும் இந்த ஆண்டு அது வெளிப்படையாகவே தெரிந்தது.

ஆனால் இலங்கை விவகாரத்திலும் ஈழத்தமிழர் விடயத்திலும் இந்தியா கையாளும் இந்த அணுகுமுறை அமெரிக்காவுக்குச் சிக்கலானதல்ல. அதேபோன்றுதான் ரஷ்யா,உக்ரைனில் மேற்கொள்ளும் இராணுவ மற்றும் அரசியல் விவகாரத்திலும் இந்தியா அமைதிகாப்பது அமெரிக்காவுக்குப் பெரியளவில் சிக்கலாக இல்லை.

'முரண்பாட்டில் ஓர் உடன்பாடு' என்ற கொள்கையின் படி இந்தியா, அமெரிக்காவுடன் அரசியல் ரீதியான காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது என்பது கடந்த காலப் பட்டறிவு. 2014 இல் இருந்து உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து இந்தியா தெரிவித்த கருத்துக்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாகவே இருந்தன.

உக்ரைனில் ரஷ்யா பொதுவாக்கெடுப்பு நடத்திய விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் நிதானத்துடன் செயற்பட வேண்டுமென புதுடில்லி கருதுவதாக இந்திய ஆங்கில ஊடகங்களை அவதானிக்கும்போது புரிகிறது.

உக்ரைனில் ஏற்பட்டுள்ள நிலை மற்றும் ரஷ்யாவின் பொது வாக்கெடுப்புத் தொடர்பாக இந்தியா அவதானம் செலுத்தாமல் இருக்கவாய்ப்பில்லை. உக்ரைன் விவகாரம் பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியத் தேசியப் பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். ஆனால் 2014 இல் க்ரீமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்ட வேளை, இந்தியாவின் பிரதமராக இருந்த மன்மோகன் சிங், அப்போது இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சிவசங்கர் மேனன் ஆகிய இருவரும், க்ரீமியா மீது ரஷ்யாவுக்கு முற்றிலும் நியாயமான அக்கறை இருப்பதாகப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதாவது க்ரீமியாவை ரஷ்யா பலாத்காரமாக இணைத்துக் கொண்டதை இந்தியா எதிர்க்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. இந்தியாவின் ஆதரவுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் அப்போது நன்றியும் தெரிவித்திருந்தார். க்ரீமியாவில் ரஷ்யாவின் நடவடிக்கைக்கு பெரும் ஆதரவு வழங்கிய சீனாவுக்கு நன்றி கூறுவதாகவும், இந்தியாவின் நிதானம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மையை ரஷ்யா பெரிதும் மதிப்பதாகவும் அப்போது புடின் பகிரங்கமாகக் கூறியிருந்தார். ஆனால் 2020 ஆம் ஆண்டு ஏப்ரலில் கிழக்கு லடாக்கில், மெய்யான கட்டுப்பாட்டு எல்லையின் நிலைமையை சீனா மாற்ற முற்பட்டபோது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அந்தவேளை அமெரிக்கா, இந்தியாவின் பக்கம் நின்றது. ரஷ்யா அமைதியாக இருந்தது. ஆனால் இன்றுவரைகூட 2020 க்கு முன்னரான மெய்யான கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியை இந்தியா மீட்கவேயில்லை.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா மாத்திரமல்ல ஐரோப்பிய நாடுகள்கூட இந்தியாவுக்கு ஆதரவாகவே இருந்தன. இந்த நிலையில் ரஷ்ய - உக்ரைன் போரில் இந்தியா யாருடைய பக்கமும் நிற்காமல், நடுநிலை என்ற போர்வையில் அமைதிகாப்பது இந்திய இராஜதந்திரத்தின் பலவீனமாகவே கருதப்படுகின்றது.

ரஷ்யா மீதான இந்திய இராஜதந்திர நிலைப்பாடு ஆச்சரியத்தை அளிக்கவில்லை என 'தி வில்சன்' மையத்தின் தெற்காசிய அசோசியேட்டும், ஆசியத் திட்டத்தின் துணை இயக்குநருமான மைக்கேல் காகல்மேன் சமூகவலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார்.

2014 இல் க்ரீமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, இந்தியா மௌனத்தை வெளிபடுத்தியது. பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் குறைவாகவே இந்தியா கருத்திட்டது.

க்ரீமியா குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்மொழிவு வந்தபோது, இந்தியா வாக்களிக்காமல் விலகி இருந்தது. இன்றும் இந்தியாவின் நிலைப்பாடு அப்படியே உள்ளது. இதை அமெரிக்கா அரைமனதுடன் ஏற்றுக்கொள்கிறது என்பதை அறிய முடிவதாக மைக்கேல் காகல்மேன் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ரஷ்ய - உக்ரைன் போர் ஆரம்பித்த பின்னரான அரசியல் சூழலில், ரஷ்யா குறித்து இந்தியா வெளிப்படையாகக் கண்டிக்காதுவிட்டாலும், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு 2014 இல் இருந்ததைவிடவும் தற்போது வலுப்பெற்றுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ரஷ்யா - உக்ரைனின் பிரதான நான்கு பிராந்தியங்களில் பொதுவாக்கெடுப்பு நடத்திய பின்னரான சூழலிலும், இந்தியா ஊமைப் பார்வையாளராக இருப்பது புதுடில்லியின் புவிசார் அரசியல் போக்குகளுக்கு எதிர்காலத்திலும் சாதகமான விளைவுகளைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்தியா விரைந்து முடிவெடுக்க வேண்டிய காலம் இது. இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் தனது கவனத்தைக் குறைத்து வட இந்திய எல்லைப் பகுதிகளில் தனது கவனத்தைக் குவித்துள்ள இந்தியா, அமெரிக்காவுடன் தொடர்ந்தும் உறவைப் பேணி வந்தாலும், ரஷ்ய ஆதரவு விவகாரம் நீண்டகாலத்துக்கு அமெரிக்காவைப் பொறுமை காக்க வைக்குமா ?என்பது கேள்விக்குறியே.

இந்தப் பின்புலத்தில் உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கெர்சன் மற்றும் ஜாபோர்ஜியா ஆகிய நான்கு பிராந்தியங்களைத் தனது நாட்டுடன் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ள ரஷ்யா, எதிர்ப்புகளையும் கடந்த அந்தப் பகுதிகளைத் தனது நாட்டுடன் இணைத்து ரஷ்ய எல்லையை மேலும் விரிவுபடுத்தும் என்பது கண்கூடு.

ஏனெனில் க்ரீமியாவை இணைத்தபோது எதிர்ப்புக்களை மீறி அதனை உறுதிப்படுத்திய ரஷ்யா, உக்ரைனின் மேற்படி நான்கு பிராந்தியங்களையும் தனது நாட்டுக்குரியதாக உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் தனக்குரிய வீட்டோ அதிகாரத்தை இறுதிய ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய ஆபத்துகள் உண்டு. இந்தப் பின்னணியிலேதான் ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா கையிலெடுக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இதனை இந்தியா புரிந்து கொண்டாலும் புதிய உலக அரசியல் ஒழுங்கு மாற்றத்துக்கு ஏற்ப ஈழத்தமிழர் விவகாரத்தை கையில் எடுக்க வேண்டும் என்ற கருத்தியலை புதுடில்லி ஏற்கக்கூடிய மன நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. சீன - ரஷ்ய உறவு என்பது இனி வரவுள்ள உலக அரசியல் ஒழுங்கு மாற்றத்தில் தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாகவே இருக்கும். சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பங்களை நிறைவேற்றினால் உலக அரசியல் ஒழுங்கிலும் மாற்றத்தைக் கையாளலாம் என்று புதுடில்லி ஆழமாக நம்புகின்றது.

அதேநேரம் அமெரிக்க ஆதரவு இந்தியாவுக்கு இருந்தாலும், எதிர்காலத்தில் ரஷ்ய விவகாரத்தில் வெளிப்படைத் தன்மையான அரசியல் நகர்வுகளை இந்தியாவிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்க்கும் சூழல் உருவாகலாம். இலங்கையைப் பொறுத்தவரை எப்போதுமே சீனச் சார்பும், அமெரிக்காவுடனான உறவை இந்தியாவைக் கடந்து நேரடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் நீண்டு கொண்டே வருகிறது.

குறிப்பாகச் சிங்கள ஆட்சியாளர்கள் 2009 மே மாதத்துக்குப் பின்னர்ரான சூழலில், இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்திய முதலீடுகளை விடவும் சீன முதலீடுகளையே விரும்பியிருந்தனர். இந்திய முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அளவுக்குச் சீன முதலீடுகளுக்குரிய எதிர்ப்புகளைச் சிங்கள அமைப்புகள் மேற்கொள்ளவேயில்லை.

ஆகவேதான் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கையை நேர்மையாக அணுக வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உரியது. அதற்காக 13 தீர்வல்ல. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரமும் ஈழத்தமிழர் விவகாரத்தை அணுகவும் முடியாது. ஆகவே 1983 இல் ஈழப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அணிசேரக் கொள்கையக் கைவிட்டு அமெரிக்காவுடன் முரண்பாட்டில் உடன்பாடான இராஜதந்திர நகர்வை ஆரம்பித்த இந்திரா காந்தியின் கொள்கையை, சமகால புவிசார் அரசியல் புவிசார் பொருளாதாரச் சூழலுக்கு ஏற்பக் கொஞ்சம் மேலே சென்று அசைக்க வேண்டிய தேவை புதுடில்லிக்கு.

மாறாகச் சிங்கள ஆட்சியாளர்களை மாத்திரம் கையாண்டால் போதுமென்ற புதுடில்லியின் ஆழமான விருப்பம் கொண்ட கருத்தியல், உலக அரசியல் ஒழுங்கு மாற்றத்துக்கு ஏற்ப இனிமேலும் செல்லுபடியாகுமா என்பது கேள்வியே.

இதற்காக இலங்கை தொடர்பான இந்தியாவின் நீண்டகால வெளியுறவுக் கொள்கையில் உடனடியாக மாற்றங்கள் ஏற்படும் என்றும் மதிப்பிட முடியாது. இருந்தாலும் அதற்குரிய நகர்வுகளில் ஈடுபட வேண்டிய அவசியத்தைத் ஜெனிவாவில் இலங்கை வெளிப்படுத்திய கருத்துக்கள் காண்பிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கைக்குப் பாடம் படிப்பிக்கத் தேவையில்லையென அமைச்சர் அலி சப்ரி ஜெனிவாவில் வெளிப்படுத்திய ஆவேசமான கருத்து இந்தியாவுக்கான எச்சரிக்கைதான்.

ஆகவே வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இருக்கும் உள்ளக முரண்பாடுகளை ஊக்குவித்துப் பிளவுபடுத்தும் உத்திகளையும், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு அமைவாகப் 13 ஐ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற கட்டாய வகுப்புகளையும் இந்தியா நிறுத்த வேண்டிய நேரமிது.

இந்தியா எவ்வளவுதான் அள்ளிக் கொடுத்தாலும், சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் இந்தியாவை நேரடியாகவே எதிர்ப்பார்கள் என்பதற்கு 1983 இல் இருந்து உதாரணங்கள் இருக்கின்றன.

மறுபுறம் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் புதுடில்லி என்னதான் பிரித்தாளும் தந்திரங்களைக் கையாண்டாலும் இன்றுவரை இந்தியாவையே ஈழத்தமிழர்கள நம்புகின்றனர்.

ரஷ்யா - உக்ரைனில் நடத்திய வாக்கெடுப்புக்குப் பின்னரான சூழலில்கூட ஜெனிவாவில் சிங்கள ஆட்சியாளர்களை ஆட்டம் காண வைத்திருக்க வேண்டிய இந்தியா, இலங்கை ஒற்றையாட்சியைப் பாதுகாக்கத் தன்னைத் தியாகம் செய்வதன் உள்நோக்கம் ஈழத்தமிழர்களுக்குப் புரியாததல்ல. ஆனால் அதுபற்றி வெளிப்படையாக விமர்சிக்க இயலாத அரசியல் சிக்கல்கள் ஈழத்தமிழர்களுக்கு அதிகமாகவே உண்டு. இருந்தாலும் ஈழத்தமிழர்கள் அந்தச் சிக்கல்களை நிதானமாகவே கையாள்கின்றர். ஆனாலும் புதுடில்லி தெரிந்தும் தெரியாதது போன்று இருக்கின்றது என்பதே கசப்பான உண்மை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சியாமளா ரீச்சரைப் பற்றி சொல்லியாகத்தான் வேண்டும். அவவினுடைய சிரிப்பும் செயற்பாட்டு வேகமும் புதிதாக நியமனம் கிடைத்த ஆசிரியரைப் போலத்தான் இருக்கும். அம்மம்மா ரீச்சர் என்கிற செல்லப் பெயர் முழுப்பிள்ளைகளிடத்திலும் பரவிவிட்டிருந்தது."

# அம்மம்மா ரீச்சர்

மகேசன் கஜேந்திரன்

சஞ்சீவி சிறுகதை

சிவபுரத்தரசி வித்தியாலயம் கலகலப்பாகத்தான் இருந்தது. பிள்ளைகளும் ஆசிரியர்களும் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தனர். 'பாண்ட்' ஒத்திகை முடிந்த பாடில்லை. மைதானத்தில் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. கிராமப்புறப் பள்ளிக்கூடம். முன்னூறு பிள்ளைகள் மட்டில் வரும். தரம் ஐந்து வரையுள்ள ஆரம்பப் பாடசாலை.

வருடாவருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் பதினைந்து பிள்ளைகளுக்குக் குறையாமல் வெட்டுப்புள்ளிக்கு மேலாகவும் முழுப் பிள்ளைகளும் நூறு வீத சித்தியையும் பெறுகின்ற அருமையான பள்ளிக்கூடம்.

அதிபர் மட்டும் ஆண். ஐம்பது வயது வரும். ஏனையோர் பெண் ஆசிரியைகள்தான். இருபத்தைந்திலிருந்து அறுபது வரையான அவர்களுக்கு. அதிபர் வலு கெட்டிக்காரர். இரண்டு மூன்று வைபவங்களை ஒன்றாக்கி யாரும் ஒரு அனுசரணையாளரைக் கைக்குள் போட்டு, மதிய உணவுடன் முடித்து விடுவார். நிதியீட்டம் இல்லாத அல்லது குறைவான இந்தப் பாடசாலை அதிபரின் உத்தி என்றும் இதைச் சிலர் சொல்வார்கள். இன்னும் சிலர் அதிபரின் கசவாரப் புத்தி என்றும் கூறாமலில்லை.

அப்படித்தான் இன்றைக்கும் ஒரு "திறீ இன்வண்" வைபவத்தை ஒழுங்கு பண்ணியிருந்தார். பரிசளிப்பு விழாவையும் ஆசிரியர் தின கௌரவிப்பையும் 'சியாமளா' ரீச்சருடைய பிரிவு பசார விருந்தையும் ஒன்றாக்கியிருந்தார்.

அன்று பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விழா முடிந்த பின்னர் வழங்கும் மதிய உணவு விருந்து சியாமளா ரீச்சரின் உபயமாகத்தானிருந்தது.

* * * * *

சியாமளா ரீச்சரைப் பற்றி சொல்லியாகத்தான் வேண்டும். அவவினுடைய முழுப்பெயர் திருமதி சியாமளா சிவராஜசோழன் .அவரைத் தரம் ஒன்று குழந்தைகள் 'அம்மம்மா ரீச்சர்" என்றுதான் சொல்வார்கள்.

தலைக்கு 'டை' அடித்துக் கைவிட்டாவோ அல்லது 'டை' அடிக்காமல் விட்டாவோ தெரியவில்லை, தலைமயிர் 'சோப்'நுரைபோல அழகாயிருக்கும்.

அவவினுடைய சிரிப்பும் செயற்பாட்டு வேகமும் புதிதாக நியமனம் கிடைத்த ஆசிரியரைப் போலத்தான் இருக்கும். அம்மம்மா ரீச்சர் என்கிற செல்லப் பெயர் முழுப்பிள்ளைகளிடத்திலும் பரவி விட்டிருந்தது. அறுபதுக்கு மேல் சேவையில் இருக்கக்கூடாது என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

இன்றைக்கும் தரம் ஒன்றிலிருந்து ஐந்து வரையுமான பிள்ளைகளை வைத்து 'இசையும் அசைவும்'நிகழ்ச்சியை சியாமளா ரீச்சரே ஒழுங்கமைத்தும் இருந்தார். காலை தொடங்கிய இறுதி ஒத்திகை ஒன்பது மணி வரை நடந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அறுபதிலும் 'அக்ரிவ் ரீச்சர்" எங்கட அம்மம்மா ரீச்சர். 'டயபற்றிக்' 'பிறசர்'எல்லாம் வகுப்புப் பிள்ளைகளைப் போல அவவினுடைய கட்டுப்பாட்டுக்குள்தான்.

வழமையாகப் பாடசாலை விழாக்களெல்லாம் பக்கத்திலுள்ள கோவிலின் பத்துமணிப் பூசை மணி ஒலியுடன் தான் ஆரம்பிக்கும். மணி கேட்கின்ற போது பிரதம விருந்தினர் மங்கல விளக்கை ஏற்றுமாப்போல ஏற்பாடு செய்திருப்பார் அதிபர்.

ஒக்ரோபர் ஆறு . முற்பகல் 9.45 மணி.

பிரதம விருந்தினர் அருகில் உள்ள கோயில் முகப்பிலிருந்து பேரிகை அணியின் (பாண்ட்) ஒலி முழக்கத்துடன் வந்து கொண்டிருக்கின்றார். மாணவ முதல்வர்களின் நாவல் நிறக்கொடி அசைவுடன் அதிபரும் பிரதம விருந்தினர் பாரியார் சகிதமும் சிரேஷ்ட ஆசிரியைகளோடு வரவேற்பு வரிசையில் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

சரியாகப் பத்துமணி கோயில் மணியோசை கேட்கிறது. பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றுகிறார். அடுத்து அதிபரும் அதன் பின்னர் சியாமளா ரீச்சரும்.. சியாமளா ரீச்சரின் முகத்தைப் பார்க்க வேண்டும். மங்கல விளக்கின் சுடரை விட அவவின் முகம் பிரகாசமாக இருந்தது. சந்தோஷம் அளவு கணக்கில்லாமல். வரவேற்பு நடனம், வரவேற்புரை நிகழ்ந்து அதிபரின் உரையும் முடிந்திருந்தது.

பிரதம விருந்தினராக வந்திருந்தவர் சிவபுரத்தரசி வித்தியாலயத்தில் தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை கற்று புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்து கிட்டிய கல்லூரியில் உயர்தரம் வரை கற்று பல்கலைக்கழகம் சென்று தனது முப்பத்து நான்கு வயதில் நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து பிரதேச செயலராக இருக்கின்றார். அவரது தகப்பன் திணைக்களம் ஒன்றில் ஆணையாளராக இருந்து நான்கு வருடங்களுக்கு முன்பு ஓய்வுபெற்று சந்தோஷமாக கோயில், லைபிறறி என்று சமூக சேவையில் பொழுதைப் போக்குகின்றார்.

* * * * *

பரிசளிப்பு வைபவம் ஒரு தொகுதி நிறைவடைந்து சியாமளா ரீச்சரின் 'இசையும் அசைவும்' நிகழ்ச்சி ஆர்ப்பாட்டமாகத் தொடங்கிவிட்டது. அனைவரும் மண்டபத்திலிருந்து மேடையைக் கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். மேடைக்குள் மறைந்து நின்றபடி மாணவர்களை உற்சாகப்படுத்தும் சியாமளா ரீச்சரின் துள்ளல்களையும் அபிநயங்களையும் சேர்த்து பிரதம விருந்தினர் சிரித்தும் ரசித்தும் அனுபவித்துக்கொண்டதை பலரும் கவனித்தார்கள். பிரதம விருந்தினரின் பாரியார் முகத்திலும் சந்தோஷம் களைகட்டியிருந்தது.

"அடுத்ததாக தரம் ஐந்து மாணவர்கள் அனைவருக்குமான பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் கௌரவிப்பு வைபவமும் நிகழவுள்ளது. ஆயத்தமாகிக் கொள்ளுங்கள்" என அறிவிப்பாளர் குரல் ஒலித்தது.

முன்வரிசையில் அமர்ந்திருந்து 'இசையும் அசைவும்' நிகழ்ச்சியை ரசித்த பிரதம விருந்தினரும் பாரியாரும் அதிபரும் மீண்டும் மேடையில் பிரசன்னமாக ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளை...

பாடசாலைப் பணியாளர் 'செல்வி' அரக்கப்பரக்க ஓடி வந்தார். அதிபரின் காதில் ஏதோ சொல்லிவிட அவரின் முகம் ஏலவே இருந்ததைவிட மேலும் கறுத்தது. இதனை பிரதம விருந்தினரும் கவனித்து விட்டார்.

' சேர் ஏதேனும் பிரச்சினையோ?' பிரதம விருந்தினரின் கேள்விக்கு, அதிபரின் பதில் , கரகரத்த குரலில் வெளிப்பட்டது.

"ஓம் சேர்., சியா.மளா...ரீச்சர் பேச்சு மூச்சில்லாமல் மயங்கிப் போய்க் கிடக்கிறாவாம்"

எல்லோரும் பதறியடித்துக்கொண்டு விரைகின்றனர். 'இசையும் அசைவும்' நிகழ்ச்சியில் பங்குபற்றிய பிள்ளைகளின் கோல உடைகளும், முகமூடிகளும் பரவிக் கிடக்கின்றன. சியாமளா ரீச்சர் மல்லாக்காக மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறார்.

" சேர் நீங்கள் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடந்துங்கோ... என்ரை மிஸிஸ் நிக்கிறாதானே.விழா குழம்பக் கூடாது சேர்...நான் பார்க்கிறன் நீங்கள் போங்கோ. நானும் ஓ.ஈ.எஸ். உம் ஹொஸ்பிட்டலுக்குப் போறம்" என்கிறார் பிரதம விருந்தினர் அதிபரைப் பார்த்து. கார் கே.கே.எஸ். வீதியினூடாகப் பறக்கிறது. பின் சீற்றில் சியாமளா ரீச்சர் செல்வியின் மடியில் மூச்சுவிடச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்.

* * * * * *

சியாமளா ரீச்சர் அவசர சிகிச்சைக்காக ஐ.சி.யூக்குள். பரபரத்த நிலையில் கண்ணாடிக்குள்ளால் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார் பிரதம விருந்தினர். உள்ளேயிருந்த டொக்டர்

"பேஷன்டைக் கூட்டிக்கொண்டு வந்த ஆக்கள் வாருங்கோ"என்று கூப்பிட்டார்.

பிரதம விருந்தினரும், செல்வியும் முன்னே வந்தனர்.

"பேஷன்டின்ர பெயரைச் சொல்லுங்கோ "

"மிஸிஸ் சியாமளா சிவராஜசோழன்"

செல்வி பதிலிறுக்கிறார்.

"வயதைச் சொல்லுங்கோ"

"நாளைக்கு அறுபது"

"விலாசம் என்ன?

செல்வி முழிக்க, பிரதமவிருந்தினர்தான் விலாசத்தைக் கூறுகிறார்.

"பாரிமனை அபிராமி கோவிலடி.,தலையாழி"

"சரி , ஐயா உங்கடை பெயரைச் சொல்லுங்கோ"

"டி.எஸ். அதியமான்"

"முழுப்பெயரைச் சொல்லுங்கோ ஐயா?"

"சிவராஜசோழன் அதியமான்""

டொக்டர் நிமிர்ந்து பார்க்கிறார். பிரதம விருந்தினரின் கண்களுக்குள் நீர் தளம்பிக் கொண்டிருந்தது. அருகில் வயதான ஒருவர் சொட்டிய கண்ணீரைத் துடைத்தபடி நின்று கொண்டிருந்தார்.

* * * * *

மதியம் பன்னிரெண்டு மணி மதியப்பூசை மணியொலி கேட்கின்றது. கார் பாடசாலைக்குள் நுழைகிறது. பிள்ளைகள் அனைவரும் மாலைகளுடன் தாயைக் கண்ட குஞ்சுகள் போல ஓடி வருகின்றார்கள்.

"கும்பம் சரிச்சிட்டீனம் போல கோயிலிலை"

மழைத்துளிகள் விழுகின்றன. அதியமான் முகத்திலும், சிவராஜசோழத்தாரின் முகத்திலும் கீற்றுகளாக வழிகின்றன. அவை மழை நீரா?கண்ணீரா?

"அம்மம்மா ரீச்சருக்கு"மட்டும் தான் புரியுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கா உட்கார பனம் பழம் விழுந்தது

**பொருள்:** காக்கை உட்காருவதும் பனம் பழம் விழுவதும் இரண்டு தனித்தனிச் செயல்கள். யதேச்சையாக ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல் நடந்தவை. ஆனால் காக்கை உட்கார்ந்ததால்தான் பனம் பழம் விழுந்ததாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இரண்டு ஜப்பானியர்கள் நியுயோர்க் சென்றார்கள். அங்கே நகரத்தைச் சுற்றிப் பார்க்க ரயில் நிலையம் சென்றார்கள். ஒரு பழக்கடையைப் பார்த்தார்கள். அப்பிள், ஒரேஞ்சுப் பழங்கள் நிறைய இருந்த அந்தக் கடையில் அவர்கள் பார்த்திராத ஒரு பழமும் இருந்தது.

கடைக்காரரிடம் அந்தப் பழத்தைப் பற்றி கேட்டார்கள்.

அவரும் அதை வாழைப்பழம் என்று அடையாளம் சொல்லி அதை எப்படி உரித்துத் தின்பது என்றும் செய்து காண்பித்தார்.

நம் ஜப்பானிய நண்பர்கள் மகிழ்ச்சியுடன் ஆளுக்கு ஒரு பழம் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி அமர்ந்தார்கள்.

ரயில் புறப்பட்ட உடன் இருவரும் பழத்தை உரித்து உண்ணத் தொடங்கினார்கள். முதலாமவன் பழத்தை முதல் கடி கடிக்கும் போது ரயில் சரியாக ஒரு சுரங்கப் பாதைக்குள் நுழைந்தது. உடனே ரயில் பெட்டிக்குள் கும்மிருட்டு பரவியது.

அவன் உடனே இரண்டாமவனிடம் அவசரமாக கத்திச் சொன்னாள். 'நண்பா, அந்தப் பழத்தை சாப்பிடாதே. நான் ஒரே ஒரு கடி கடித்த உடனே குருடாகி விட்டென். அந்தப் பழத்தில் விஷம் இருக்கிறது. தயவு செய்து சாப்பிட்டு விடாதே' என்றான் அவன்.

## பொது அறிவு

1. இலங்கையிலுள்ள மாகாணங்கள் எத்தனை?
   **9 மாகாணங்கள்**
2. இலங்கையில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
   **25 மாவட்டங்கள்**
3. இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் எத்தனை?
   **22 மாவட்டங்கள்**
4. அபயவாவி எந்த மன்னனால் கட்டப்பட்டது?
   **பண்டுகாபய மன்னன்**
5. மின்னேரியாத் தெய்வம்' என அழைக்கப்படும் மன்னன்?
   **மகாசேனன்**
6. சிகிரியாக் குன்றை அமைத்த மன்னன் யார்?
   **காசியப்பன்**
7. சுற்றுலாவிகளை கவர்ந்திழுக்கும் நீர்வீழ்ச்சிகள்
   **துன்கிந்த, தியலும**

## மனிதமும் கொரோனாவும்

கொரோனா கொரோனா நீ
மனிதனின் எமனா?
இல்லை மனிதனுக்கு
பாடம் புகட்ட வந்த நுண்ணங்கி இனமா?

உன் வருகையால்
மனிதம் கண்டதே பல மாற்றம்
ஆனால் நீ மனிதனில்
கண்டது அவன் மரணம்

புவிக்குவெளியில் சென்று
விஞ்ஞானத்தால் விந்தை
படைத்தான் மனிதன்
ஆனால் உன் விந்தைக்கு
பதில் இல்லை
அவ்விஞ்ஞானத்தால்



அந்நியச் செலாவணி
அழிந்தது உன்னால்
நாட்டின் பொருளாதாரமும்
அதனால் நலிந்தது

உன்னாலான மனித மரணத்தை
மறைக்கிறான் மனிதன்
உன் பெயர் சொல்லி அடைகின்றன
சில நாடுகள் பெருலாபம்
அடியோடு பெயர்ந்தன
பல நாடுகள் உன் பீதியால்
உன் அழிவுக்கான ஆயுதம்
ஒவ்வொரு மனித மனங்களிலும்
அவ் ஆயுதமே மனவுறுதி

- வசந்தன் லக்சன்
தரம் – 11
மு/தண்டுவான் அ.த.க பாடசாலை

## சிறுவர் கைவண்ணம்




**வ.இமாஜன்**
தரம் 11
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



**ஷேரசாயினி,**
தரம் 2C
யா/கண்டுக்குழி
பெண்கள் பாடசாலை





**செ.துவாரகன்**
தரம் :9
யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்.



**ச.கனுஜன்,**
தரம் 9
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

மாணவர்களே...
உங்கள் ஆக்கங்களும்
சஞ்சீவியில் பிரசுரமாக
அனுப்ப வேண்டிய முகவரி
077 316 5555
என்ற எண்ணுக்கோ அல்லது
sanjeeviuthayan@gmail.com
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கோ அனுப்பலாம்



**உ.அக்சனா,** 07C
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



**கனிஸ்கா,**
தரம் 6A
J.M.L.C



**ம. லிஸ்சி**
ஆண்டு 3A
சா/ டிறிபேக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




○ கோகுலராகவன்

கடந்த செப்ரெம்பர் 18ஆம் திகதி வெளியான 'இருந்து கதைப்பம்' பதிவில், நாடுகாண் பயணிகள் பியரி,ஹென்சன் ஆகியோர் பற்றிய பதிவைப் பார்த்தோமல்லவா. இன்னுமொரு சுவாரசியமான தகவல் இவர்களைப் பற்றி கிடைத்தது.

அவர்கள் இருவரும் (பியரியும், ஹென்சனும்) கிறீன்லாந்தில் தங்கி இருந்த காலத்தில் ஆளுக்கொரு எஸ்கிமோவர் பெண்களை காதலித்து, வாழ்ந்திருக்கிறார்கள். இது சட்டபூர்வமானதல்ல. அவர்களோடு கொண்ட காதல் உறவின் காரணமாக, அந்த எஸ்கிமோ பெண்கள் இருவருக்கும் குழந்தைகளும் பிறந்தன.

1951 இல் பிரெஞ்ச் நாடுகாண் பயணியான ஜீன் மலோரி கிறீன்லாந்துக்கு போன போது, இந்தத் தொடர்புகளை கண்டுபிடித்து வெளிப்படுத்தினார்.

இந்தத் தகவல்களை அறிந்த அமெரிக்க நரம்பியல் நிபுணரான எஸ். அலன் கௌன்ரர் நேரடியாகச் சென்று மேலும் தகவல்களை திரட்டி , பியரி - ஹென்சன் இருவரது பிள்ளைகளையும் யார் யாரென உறுதிப்படுத்திய பின், அவர்களை 1986 இல் அமெரிக்காவுக்கு அழைத்து வந்திருக்கிறார்.

(இந்த அலன் கௌன்ரர் ஹென்சனுக்கான வடதுருவ பயணத்துக்கான அங்கீகாரம் கிடைக்கப் போராடியவர்களில் ஒருவர்)

ஹென்சனின் காதலியாக இருந்த எஸ்கிமோ பெண்ணின் பெயர் கரிங்வா. (Katingwah)

இவருக்கும் ஹென்சனுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனது பெயர் அனோகக் (Anauakaq) .

பியரியின் காதலியின் பெயர் அலிகசினா( Aleqasina) .

இவருக்கும் பியரிக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்ததாகக் குறிப்பு உண்டு. காலா (kaala) , காலி (kali) என்பதே அந்த ஆண் குழந்தைகளின் பெயர். ஆனால் காலாவைப் பற்றி தகவல் தெரியவில்லை.

அலன் கௌன்ரர் அமெரிக்காவுக்கு, பியரியின் மகனான காலியையும், ஹென்சனின் மகனான அனோகக்யையும் 1986இல் அழைத்து வந்தார்.

அவர்கள் இருவரும் வரும்போது அவர்களது தந்தையர் இருவரும் உயிரோடு இல்லை. அவரவர் தந்தையர்களின் கல்லறைகளுக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

ஹென்சன் ஏற்கனவே இருதடவை மண முடித்தவர். ஆனால் அவரது இரு திருமண பந்தத்திலும் அவருக்கு குழந்தைகள் இல்லை. ஆகவே அவரது ஒரேயொரு வாரிசு அனோகக்தான்.

பியரியும் ஏற்கனவே திருமணம் ஆனவர்தான். ஆனால் அவருக்கு அமெரிக்காவில் ஏற்கனவே குழந்தைகள் இருந்தார்கள். பியரியோ, ஹென்சனோ தமக்கு இவ்விதம் எஸ்கிமோ காதலிகள் இருந்ததாகவோ அல்லது அவர்களுக்கு குழந்தைகள் இருப்பதாகவோ ஒரு தடவையும் வெளிப்படுத்தவேயில்லை.

18

பியரி அலிகசினாவின் புகைப்படம் ஒன்றை வைத்திருந்தார். அதை எடுத்துப் பார்த்ததுமில்லை, யாரிடமும் காட்டியதுமில்லை.






இருவரும் ஒரு தடவை திரும்பிப் போய் மனைவி, மக்களைப்பார்க்கவோ நினைத்ததும் இல்லை.

அனோகக்கும், காலிக்கும் தம் தந்தையரின் முகத்தை ஒருதடவை கூட நேரில் கண்டதில்லை. வெளி உலக அறிவு இல்லாத பெண்களாக இருந்தபடியால் அந்த எஸ்கிமோ பெண்கள் இவர்களுக்கு எதிராகப் போராட முனையவில்லை.

அனோகக்கும் காலியும் அமெரிக்கா வந்தபோது தமது தகப்பன்மாரது உறவினர்களைச் சந்தித்துக் கொண்டனர்.

அனோகக் 1987 இல் காலமாகி விட்டார். அவருக்கு 5 பிள்ளைகள். ஹென்சனும், பியரியும் வடதுருவத்தில் கொடி மட்டும் நட்டால் போதாது அங்கே தமக்கு வாரிசுகளும் இருக்க வேண்டும் என நினைத்தார்களோ.? என்னவோ?.

(இன்னும் கதைப்பம்)



# சொற்சிலம்பம் போட்டி

104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | 8 | | ■ | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | 16 |
| | ■ | 17 | 18 | | | ■ | |
| ■ | 19 | | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................

முழுமையான தபால் விலாசம்: ......................................

.................................................................................

கையொப்பம்:......................................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. பெறுமதி/ பெருமை 4. அரசியல்வாதிகள் இதற்கு அதிகம் ஆசைப்படுவார்கள். 6. மறு 7. இடச்சுகம் 9. பாரமான தன்மை 10. இது மிகப் பெரிதாகவரின் ஆபத்தானதே 11. ஒரு பருப்பு வகை 13. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் 14. தேர் இழுக்கும் கயிறு 15. காந்தமும் கவரும், துருவும் பிடிக்கும் 17.பதிவைக்கப்பட்ட நாற்று 19. மூப்புற்று பழுத்தல் 20. ஒரு குறியீடு 21. நல்லது 22. ஒன்றுமில்லாததைப் பெரிதாகக் காட்டுபவன்

## மேலிருந்து கீழ்

1. மேன்மையான தன்மை 2. இதன் அதிகரிப்பு மக்களுக்குச் சுமையே 3. பூமி 4. தலைவன் /இடம்/ கணவன் 5. குளிசை 8. மனைவி 9. கைபிடி 10. அருமையானது என்பதைக் குறிக்கும் 12. ஒரு திசையின் சுருக்கம் 13. சம்பவிக்கும் 15. பண்பு 16. ஒரு பாம்பின் ரகம் 18. ஓர் உத்தரவிடும் சொல் 19. பின் அல்ல 20. கூட்டும் குறி

### சொற்சிலம்பம் போட்டி 103 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. காமுகன் 4. மதகு 7. சுகம் 8. சீதனம் 9. தபுதாரன் 11. குலை 12. மிக 13. கட 14. சோரம்போதல் 16. தியாகம் 18.தம் 19. தேசம் 20. தக 22. வினை 23. வரன்முறை

**மேலிருந்து கீழ்**

1.காசு 2. முகதலை 3. கம்பு 4. மதன் 5.தன 6. கும்பிடல் 8. சீரகம் 9. தலை 10. தாமிரம் 11. குந்திதேவி 12. மிரம் 13. கதம் 14. சோகம் 15. போதகன் 17. யாசனை 18. தகன் 20.தர 21. உறை

**சொற்சிலம்பம் போட்டி இல.104**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

14.10.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது [illegible] அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 103 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

1 ஆம் பரிசு
வே.நாகேந்திரா
சந்தை வீதி, ஆவரங்கால்
புத்தூர்

2 ஆம் பரிசு
சி.கிருத்திகா
இல.372/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

3 ஆம் பரிசு
செ.சந்தனராசா
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

4 ஆம் பரிசு
அ.விகாஷியா
16/15, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை

5 ஆம் பரிசு
அ.ராதாமணி
ஏ-25, கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

**1505–1948 வரை**

ந.பரமேஸ்வரன்

அவர் தனது உடைகளை எடுத்துக் கொண்டு வந்துவிட்டார். பெற்றோரால் வீட்டை விட்டு துரத்தப்பட்ட அவரை எமது திருச்சபை மருத்துவக்கல்வி பயில்வதற்காக மானிப்பாய்க்கு மருத்துவர் கிறீனிடம் அனுப்பியது. அவர் இப்போது மானிப்பாய் மருத்துவமனையில் சிறந்த உள்ளூர் மருத்துவராக விளங்குகிறார். இவருக்கு சமூகத்தின் அங்கீகாரமும் உள்ளது.

இவர் ஒரு கிறிஸ்தவப் பெண்ணை திருமணம் செய்து அழகான கல் வீட்டில் வசித்து வருகிறார். இவரது மனைவியும் அழகான இனிய சுபாவமுடைய பெண்மணி. ஞாயிறு அறநெறி பாடசாலைகளில் வகுப்புகளை நடத்தி வருகிறார்.

இவர்களின் மூத்த மகளுக்கு _19 வயது) திருமணமாகி விட்டது. விடுதிப் பாடசாலையில் தங்கிப் படித்தவர். ஆங்கிலம் பேசுவார்; ஓர்கன் வாசிப்பதுடன் இனிமையாகப் பாடுவார். சிறப்பான முறையில் தையல் வேலைகளைச் செய்வார் அத்துடன் நல்ல குடும்பப் பெண்ணாகவும் நல்ல கிறிஸ்தவராகவும் விளங்குகிறார்.

அறநெறிப் பாடசாலைகளில் எல்லோரும் காலை 8.30 மணிக்கு வர மாட்டார்கள். அதனால் மத்தியானத்தில் அயல் கிராமங்களுக்கு தனது சிறு குழந்தைகளுடன் சென்று வகுப்புகளை நடத்துகிறார்.

உயர்குல சைவக் குடும்பத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்வி பயின்று கிறிஸ்தவத்தை தழுவிய ஒருவர் இவருடைய மகளை திருமணம் செய்ய விரும்பினார்; இதை அறிந்த இளைஞனின் பெற்றோர் கடும் கோபமடைந்தனர். அவர்கள் உயர்குல சைவப் பெண்ணையே தமது மகனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினர்.

அவர்கள் தமது மகனிடம் மீண்டும் சைவ சமயத்துக்குத் திரும்பி ஒரு சைவப் பெண்ணைத் திருமணம் செய்தால் 300 ஸ்ரேர்லிங் பவுண் வழங்குவதாகக் கூறினர். அத்துடன் உறவினர்களும் திருமண செலவுகளுக்காக 100 ஸ்ரேர்லிங் பவுண் வழங்குவதாக கூறினர்.

ஆனால் அந்த இளைஞர் அவர்களின் வேண்டுகோளை நிராகரித்து விட்டு தனது சாதியைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெண் ஒருவரை திருமணம் செய்ய விரும்பினார். அவருடைய தாய் "நீ ஒரு இந்துப்பெண்ணைத் திருமணம் செய்யாவிட்டால் நான் கிணற்றில் குதிக்கப்போகிறேன்" என அச்சுறுத்தினார்.

தந்தை தனது பரம்பரைச் சொத்தில் எந்த வித பங்கும் தரமாட்டேன் என எச்சரித்தார். இறுதியில் அவர்கள் தங்களில் ஒருவர் தற்கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினர்.

இதன்காரணமாக மணமகனின் உறவினர்கள் எவரும் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கிறிஸ்தவ மிஷனரிகளும் மிகுந்த செல்வாக்குடைய உள்ளூர்வாசிகளுமாக 800 பேர் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் தேவாலயத்தில் திருமணம் நடைபெற்றது . நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். பலருக்கு உள்ளூர் போதகரின் வார்த்தைகளைக் கேட்பதற்கும் ஒரு கிறிஸ்தவ திருமணத்தை பார்வையிடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு அந்தி சாயும் வேளையில் தான் திருமணம் நடைபெற்றது. உள்ளூர் வாத்தியக் கருவிகளுடன் கிறிஸ்தவப் பாடல்களை உள்ளூர் போதகர்கள் இனிமையாகப் பாடினார்கள். மணமக்கள் வீடு செல்லும் வரை வீதியில் நிலப்பாவாடை விரிக்கப்பட்டது. மணமக்களின் தலையை மலர்க் கிரீடங்கள் அலங்கரித்திருந்தன. வீதியில் வாணவேடிக்கைகளுடன் கண்ணைக் கூசும் வகையில் சிவப்பு, நீல நிற விளக்குகள் சகிதம் பாண்ட் வாத்தியத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. கிறிஸ்தவத்தில் இணைந்து கொண்டதையிட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என நாங்கள் நினைக்கிறோம்.

**மானிப்பாய் ஜனவரி 1885**

நகரசுத்திகரிப்பு தொழிலாளர் சமூகத்தை சேர்ந்த ஒருவர் எமது சபையில் இணைந்து கொண்டார். இவரை சைவசமயத்தை சேர்ந்த முன்னாள் எஜமானர்கள் அச்சுறுத்தினர்.

ஆங்கிலேய அரசு இந்த முன்னைய சாதிப்பாகுபாடுகளை தடை செய்திருந்தாலும் அது இப்போதும் நடைமுறையில் உள்ளது. இதனால் குறைந்த சாதிக்காரர்கள் உயர்சாதியினருக்கு அஞ்சுகின்றனர்.

ஒருநாள் இவர் தனது துணிகளை விற்பதற்காக நகரப்பகுதிக்கு எடுத்து சென்ற வேளையில் வழியில் வைத்து அவனது உடமைகளை கொள்ளையடித்ததுடன் அரைஞாண் கொடியையும் பறித்துக்கொண்டு திரும்பிவர முடியாதவாறு முன்பின் தெரியாத இடத்தில் கொளுத்தும் வெயிலில் பத்து மைல் தூரத்தில் கொண்டு போய் விட்டுச் சென்றுள்ளனர்.

அதாவது சிறை வைத்தது போன்று அவர்கள் நடந்துகொண்டனர். ஏனைய குறைந்த சாதிக்காரர்களை கிறிஸ்தவத்துக்கு வரவிடாது தடுப்பதே இதன் நோக்கம்.

பின்னர் உயர்சாதியினர் இவர் மீது பொய்க்குற்றச்சாட்டு ஒன்றை சுமத்தி வழக்குத் தாக்கல் செய்தனர் . எனினும் எமது உள்ளூர் கிறிஸ்தவர்கள் அவரை விடுவித்தனர்.

*(வரலாறு தொடரும்)*



மருத்துவர் கிறீன் 1848இல் மானிப்பாயில் ஆரம்பித்த இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரி



# ஊர்ப்புதினம்

இராகவன்



60

இதுக்கை நானும் கொஞ்சம் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கு. இவர் என்ர மனிசிக்கு ஒண்டவிட்ட தாய்மாமன் எண்டு சொல்லியிருக்கிறன். இதைவிட என்ர அப்பரோடை இவர் வலுநெருக்கம். உயிர்ச் சிநேகிதமெண்டு வையுங்கோவன். அதால அவர் அடிக்கடி எங்கடை வீட்டை வந்து போவார். எங்கடை வீட்டுக் குசினிக்கு நிலையமெடுத்துத் தந்ததும் இவர்தான்.

எங்கட அப்பரின்ர மூத்தண்ணரின்ர பெயர் கந்தசாமி. இவர் கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில அதிபராயிருந்து பெஞ்சன் எடுத்தவர். இவரின்ரை. ஊராக்கள் கந்தவன் வாத்தியார் எண்டு கூப்பிடுவினம். கல்வெட்டுகளுக்குக் கையறு நிலைப்பாக்கள் எழுதிறதிலை வலுவிண்ணன். எங்கடை அப்பரும் இவரும் 'டபுள் அக்ரிங்' படங்களிலவாற கதாநாயகன் மாதிரி அச்சுஅசலா ஒரே மாதிரி இருப்பினம். முன்பின் தெரியாதாக்கள் ஏமாந்துபோவினம். சிலர் அப்பர் எண்டு நினைச்சு இவரோடையும், இவர் எண்டு நினைச்சு அப்பரோடையும் கதைச்சிருக்கினம். (இதுக்குள்ள இன்னுமொரு விசயம். எங்கடை மூத்தண்ணரும் இவரின்ரை மூத்தமகனும் அச்சுஅசலா ஒரேமாதிரியிருப்பினம் . இப்பிடியிருக்கேக்க, எங்கடை அப்பர் 2012. ஜனவரி நாலாந் திகதி இரவு 11.20 மணிக்குக் காலமாகிவிட்டார்.

அண்டைக்கிரவு 12.10 மணிக்கு பெரியப்பர் (அப்பரின் மூத்தண்ணர்) காலமாகிவிட்டார். திகதி நியமப்படி பாத்தால் அப்பர் நாலாந்திகதியும்,பெரியப்பர் அஞ்சாந் திகதியும் காலமானதாகக் கொள்ளலாம். ஆனால் ஒரேயிரவிலதான் இரண்டு பேரும் காலமாகியிருக்கினம். இதுதான் சகோதரபாசமெண்டு ரண்டு செத்தவீட்டுக்கும் வந்து போனாக்கள் சொல்லி ஆச்சரியப்பட்டிச்சினம். எங்கடை அப்பர் புதன் செத்து வியாழன் எடுத்தது. பெரியப்பரை ஞாயிறு எடுத்தது.

சரி! இப்ப விசயத்துக்கு வருவம். எங்கடை அப்பர் சாகேக்குள்ள என்ர மனிசி ஆறுமாத கர்ப்பிணி. அதால செத்தவீட்டுக்கு வந்திருந்த மனிசியின்ர சித்தப்பா என்னைக் கூப்பிட்டு 'மனிசி கெற்பெனியாயிருக்கேக்குள்ள நீ கொள்ளிவைக்கேலாது. கொம்மாதான் வைக்கவேணும்' எண்டார். நான் குழம்பிப் போனன். மூத்தண்ணன், இளையண்ணன் இரண்டு பேரும் 'வெளிநாட்டிலயிருந்து உடனை வரேலாது.

சவத்தை எடுங்கோ' எண்டிட்டாங்கள். என்ன செய்யிறதெண்டு பாத்தால் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் முன் வரிசையிலயிருந்தார். நான் அவரிட்டப் போய் விசயத்தைச் சொன்னன். 'எந்தமேதாவி உனக்குந்தக் கதையைச் சொன்னவன். தேப்பனுக்கு மகன் கொள்ளி வைக்கிறதெண்டது கடமை. அதுக்குச் சாத்திரத்தில ஒரு தடையுமில்லை. பேசாமல் போய் அலுவலைப் பார்' எண்டார். பெரிய நீதிவான் தீர்ப்புச் சொன்னாப் போல மறுகதைக்கிடமில்லை. எல்லாம் நல்லபடியா நடந்துமுடிஞ்சுது.

எனக்கு முதல் நியமனங் கிடைச்சது 2005 ஓகஸ்ட் மாதம் முதலாந்திகதி. யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு இணைப்புச் செய்தாப்போல மெடிக்கல் எடுக்க வேண்டியிருந்தது. இரண்டு நாள் டியூட்டி லீவு தந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு விட்டினம். எல்லாம் நல்லடியாத்தான் போய்கொண்டிருந்திச்சுது. ஆனால் கண்பரிசோதனையாலதான் எல்லாங்குழம்பினது. அங்கை முதல்ல இடக்கண்ணை மூடிக்கொண்டு வலக்கண்ணால வாசிக்கச் சொல்லிச்சினம். ஒரு தடங்கலுமில்லாமல் வாசிச்சிட்டன். பிறகு வலக்கண்ணை மூடிக்கொண்டு இடக்கண்ணால வாசிக்கச்சொல்லிச்சினம். பெரிய எழுத்துக்களை ஒரு மாதிரி தட்டித் தடவி வாசிச்சிட்டன். சின்ன எழுத்துக்களை வாசிக்க முடியேல்ல. இரண்டு மூன்று தரம்' ட்றை' பண்ணியும் சரிவரேல்ல. "உங்களுக்குக் கண்ணாடி போடாமல் சரிவராது. நீங்கள் வியாழக்கிழமை வாங்கோ. பெரியய்யாட்டைக் காட்டிப் போட்டுக் கண்ணாடியை எடுங்கோ. அதுக்குப் பிறகுதான் மெடிக்கல் தரலாம்" எண்டிச்சினம். எனக்குச் சரியான மனவருத்தமாப்போச்சு. பிறகு வியாழக்கிழமை போனன். பெரியய்யாவிட்ட காட்ட விட்டினம். பெரியய்யா ஆர் தெரியுமோ? இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் காலமான குகதாசன் ஐயா தான். அந்தாளை ஒருக்கால் பாத்தாலே வருத்தம் மாறிப்போம். அப்பிடியொரு பாந்தமான தோற்றம். அந்தாள் என்னை ஒரு மணித்திலாயத்துக்கு மேலை அக்குவேறு ஆணிவேறாகச் சோதிச்சிட்டு 'எல்லாருக்கும் இரண்டு கண்ணின்ர லென்சும் வளைவாய்த் தானிருக்கும். உமக்கு மட்டும் இடக் கண் லென்ஸ் கூராயிருக்கு. இதை ஒரு லென்ஸை உள்ளுக்கை பொருத்தித்தான் அஜெஸ்ட் பண்ண வேணும். அதை நீர் பிறகு ஆறுதலாச் செய்யும். இப்ப நான் மெடிக்கல் றிப்போட்டை நோமல் எண்டுதாறன்' எண்டு சொல்லி நெஞ்சில பாலை வார்த்தார். அண்டைக்கு இவர் வடகோவை வரதராஜனின்ர பேஸ்புக் குறிப்பை பாத்தாப் போல எனக்கும் குகதாசன் ஐயாவின்ர ஞாபகம் வந்ததால இதை எழுதிறன். அடுத்த கிழமை இதை எழுதேலாது. ஏனெண்டால் ஊர்ப்புதினம் முதலாம் பாகம் இதோட முடியுது. பிறகொரு சந்தர்ப்பத்தில சந்திப்பம்.

*(முதல் பாகம் நிறைவு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாண் புகழ் பாட பல வருடம் தேவையயா!

சின்ன வயசில அப்பர் தந்த
சில்லறைக் காசோடு
பள்ளிக்கு போகுமுன் பலநாள்
படலையில் காத்திருந்தது பாணுக்காய்..

பாடம் நடேக்கேக்க பராக்குப் பார்த்தாலும்
பதினொருமணி இடைவேளைக்காய்
பார்த்துக்கொண்டிருப்பம்.

அடிபட்டு மிதிபட்டு கன்ரின் போய்
அட்டை பணிஸ் வாங்கி
அஞ்சு ரூபா ரீயில அதை
தோச்சு திங்கையில..
தொண்டையில தேன் இறங்கும்.
அண்டு முழுதும் பசியடங்கும்.

எட்டாவது படிக்கையில
எங்கட பெட்டையள்
எனக்கும் ஏதும் வாங்கி வா எண்டு காசு தந்தா
எண்ணற்ற புளுகம் எங்களுக்கு

கன்ரினிலும் கடையிலும் பணிஸ் என்றாலும்
விடியக்காலை வீட்டில
விருந்து வைப்பது பாண் தான்..

வயல் வெட்ட வந்தவர்க்கும்
வங்கி வேலை செய்பவர்க்கும்
வயது , தொழில் பாராமல்
காலை உணவு இந்த
கருக்கல் பாணும் சம்பலும் தான்.

மாசிச் சம்பலும்
மஞ்சள் சொதியும் சுடச்சுட
ரோஸ் பாணும் சேர்த்து உண்டு பார்த்தா
படுக் கிழவனும்
பதினாறுக்கு போயிடுவான்.

சீசனுக்கு ஏற்றபடி
சீனிக் கதலியோடும் , மாம்பழத்தோடும்
கப்டன் மீன்ரின் குழம்போடும் என்று
கலவைகள் வேறுபடும்.

அச்சுவேலி பெடியள் ஆளளவு உயர
ஆடு அடிப்பானுகள்.
இறைச்சி முழுதையும் இலையில் பரவ
இன்னொரு பக்கம் இரத்தவறையோடு
பாணை பிய்ச்சு
தொட்டு திங்கையில
சொர்க்கம் தெரியுமையா.



இப்படியே
பாணின் புகழ்பாட
பல வருசம் ஆகுமையா.

இன்று தங்கம் போல பாணும்
சடுதியாக விலை ஏறினதால
எங்கயும் காண முடிவதில்லை.
ஏழைகள் பசி வலி
எவருக்கும் புரிவதில்லை.

- எஸ்.பி. தீபகன்

## உதிரும் எண்ணங்கள்



மறையும் அந்தக் கதிரவன் கண்டு
சில உதிரும் எண்ணங்கள்
கடந்துவந்த பாதையில்
பல நட்சத்திரங்கள்
கடந்த பின்னும்- நின்று ஒளிவீசும்

காற்றின் கரங்கள்
கன்னத்தை வருட
கண்ணில் கசியும்- சில
கடல் நீர்த்துளிகள்
கனத்துப்போன இதயத்தில்- சில
இதமான பாடல்கள் காதோரத்தில்
மறந்துபோனேன் நான்
இது பேருந்தின் யன்னல் ஓரம்

சு. டர்சன்

# எனது ஊரிலும்தான்.. 07





○ சி.கதிர்காமநாதன்

முந்திப் பார்த்த மாதிரித்தான் இருக்கிறீர்" என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போது பின்னால் ஒரு பெண்ணும் இரண்டு பிள்ளைகளும் நிற்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்துவிட்டு நான் விழித்தேன்.

"என்ன நிறைய யோசிக்கிறீர்? இவா இந்த ஊர்ப் பொம்பிளைதான். விரும்பினம். கல்யாணம் செய்தம். வீட்டுக்குக் கனநாளைக்குப் பிறகுதான் தெரியும்"

"இப்ப எங்க ஆயத்தம்?"

"மகனுக்கு ரஜனி படம் என்றால் இஷ்டம். அதான் அழைச்சிட்டுப் போறம்" என்றார் அவர் மனைவி.

"இரண்டு பேருக்கும் என்ன பேர்?"

"வினோத், லாவண்யா"

என்னைப்பற்றியும் ஊரைப்பற்றியும் விசாரித்தார்கள்.

"ஏதோ நல்ல காலம். நான் எண்பத்து மூன்றிலேயே இங்க வந்திட்டன். மற்றவை ஊரிலை இருந்து கஷ்டப்படுகினம்" என்றார்.

பிள்ளைகள் இருவரும் தனியார் கல்லூரியில் ஆங்கில மூலம் கற்பதாகசக் கூறிவிட்டு என்னிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள்.

"நானும் இங்கேயே கல்யாணம் செய்துவிடலாமா?"

நிம்மதியான வாழ்க்கை. சினிமா, நாடகம், பீச் என்று சுற்றிக் கொண்டு திரியலாம். என்ன கவலை?

எல்லாம் மனம்தான். ஒருவருடம் ஓடினால் எனக்கும் இந்த மாறுதல் வந்துவிடுமா? காலம்தான் தோட்டாக்கள் போல விரைந்தது.

எனக்கு என்மீது நம்பிக்கை இருந்தது. இடையிலே முதலாளி வந்துபோனது கனவுபோல இருந்தது. இங்கு தொழில் பிரச்சினை இல்லாமற்போவது குறித்து திருப்திப்பட்டார். ஊருக்குப் போகலாம் என்றார். அவர் இங்கு தங்கியிருந்த நாளே குறைவு. காந்தனிடமிருந்தும் கடிதம் வந்தது. தனக்கு வவுனியாவில் வேலை கிடைக்கும் என்று எழுதியிருந்தான்.

ஸ்ரீராம் இல்லாத குறையைத் தீர்ப்பதற்கு மனம்விட்டுப் பேசுவதற்கு ஒரு நண்பன் வேண்டும். அது இன்னமும் எனக்குக் கிடைக்காதவொன்று.

இரவு சாப்பிட்டுவிட்டுத் திரும்பும்போது நாகலிங்க மரத்தடியில் ஒருவர் தனியாக அமர்ந்திருந்தார். சற்றுப் பருத்த உடல். முகத்திலே கண்ணாடி அணிந்திருந்தார். ஸ்ரீராமும் இப்படித்தான் கண்ணாடி அணிந்திருப்பார். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

எனக்கு சந்தோஷமாக இருந்தது.

"நீங்க சிலோன் தானே?"

'ஓம்' எனத் தலையாட்டிவிட்டுக் கேட்டேன்.

"எப்படித்தெரியும் உங்களுக்கு?"

"பிரகாஷ் சொன்னான். சாப்பிடக் கடைக்குப் போனீங்க என்று"

"நான் நினைத்தன், முகத்தைப் பார்த்துப் பிடிச்சுப் போட்டீங்க எண்டு. இங்க கனபேர் அப்படித்தான் சொல்லுறார்கள். முகத்தைப் பார்த்தாலே சிலோன் எண்டு தெரியுமாம்" அவர் நான் சொன்னதைக் கேட்டு புருவங்களை உயர்த்திப் பார்த்தார்.

"எல்லாரும் அப்படிச் சொல்லமாட்டாங்க"

அன்றிரவு நானும் சிதம்பரமும் படுக்கப்போகும்போது இரவு 12 மணிக்கு மேல் ஆகிவிட்டது. ஆமாம். அவர் பெயர் சிதம்பரம் என அறிந்தேன். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப்படிப்புப் படிக்கிறார். அவரது பெற்றோர், சகோதரர்கள் எனது பிளாட்டிலே குடியிருக்கிறார்கள். எல்லா விடயங்களும் கதைத்தோம். தன்னைப்பற்றிச் சொன்னார். என்னைப் பற்றியும் அறிந்து கொண்டார். எனது நிலையைக் கண்டு ஆதரவாகச் சொன்னார்.

"இங்க மற்றவர்கள் பேசுற பேச்சுக்களை ஒரு காதிலே கேட்டு மற்றக்காதிலே விட்டிடணும். இது இருக்கிறது

நீர் மறுபடி உமது ஊருக் குப் போகணும். உமது எதிர் காலத்தை நீரே தீர்மானிக்க ணும். இங்க சிக்கலில மாட் டிக்காம ஜாக்கிர தையா நடந் துக்கணும்...

எமது ஊர்ப்பிரச்சினைதான். நீர் மறுபடி உமது ஊருக்குப் போகணும். உமது எதிர் காலத்தை நீரே தீர்மானிக்கணும். இங்க சிக்கலில மாட்டிக்காம ஜாக்கிரதையா நடந்துக்கணும்"

சிதம்பரம் இன்று தங்கள் இருப்பிடத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்.

"வாப்பா. வந்து உக்காரு" சிதம்பரத்தின் அம்மா அன்பாக வரவேற்றார். சிதம்பரத்தின் தந்தையும் மூன்று சகோதரிகளும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தனர். சிதம்பரம் என்னைப் பற்றி அவர்களுக்குச் சொன்னார்.

"கஷ்டம் தானேப்பா. வீட்ட விட்டுத் தனியா வந்து.."

"பிரச்சினை தீர்ந்திடும் என்று தானே நியூஸ் வருது" சாப்பிடச் சொன்னார்கள்.

"இன்னுங்கொஞ்சம் சாதம் போட்டுக்குங்க. மீனாட்சி தயிர் விடு"

"வேண்டாம். நான் தயிர் சாப்பிடுகிறதில்லை"

"என்ன? தயிர் சாப்பிடறதில்லையா? அதான் ஒல்லிக்குச்சியாட்டம் ஒடம்பு. நல்லாச் சாப்பிடணும்" சிதம்பரத்தின் அம்மா சாப்பாடு போட்டபடி ,அன்பை அதிகம் பரிமாறினாள். இப்படித் தொடங்கிய நட்பால் வெளியே போவது அதிகம் தடைப்பட்டது. பின்னேரம் 6 மணியானதும் அவர்கள் வீடு செல்வது, ரிவீ பார்ப்பது, பேப்பர் படிப்பது என்று பொழுது போனது. சிதம்பரத்தின் அப்பா சில நாட்களுள் 'டா' போட்டு அழைக்கத் தொடங்கினார். அவ்வளவு உரிமையுடன் என்னுடன் பழகினார்கள். ஆரம்பத்தில் என்பேச்சு அவர்களுக்கு விளங்காமல் இருந்தது.

"என்ன இவர் பேசறது ஒண்ணுமே புரியலை"

சிதம்பரத்தின் சகோதரிகள் விழித்தார்கள்.

"கொஞ்சம் பொறுமையா நிதானமாகப் பேசுங்க" என்று கிண்டல் செய்தார்கள். இடையிடையே சிதம்பரத்தின் வீட்டுச் சாப்பாட்டால் வயிறு நிரம்பியது. நான் இவர்களோடு இப்படிப் பழகுவது பிளாட்டில் இருந்த மற்றவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

◊◊◊◊◊◊◊

பஸ் அடிபட்டுவிட்டதென்றும் அதில் வந்த சில பயணிகளுக்குக் காயம் என்றும் ஒப்பிஸ் பையன் சொன்னான். பஸ் விழுப்புரத்துக்கு அப்பால் லொறியுடன் மோதிவிட்டது. பஸ்ஸின் முகப்பும் வலதுபக்கமும் சேதமானதோடு முகப்புக் கண்ணாடிகளையும் மாற்ற வேண்டும் என்றார்கள். உடைந்த கண்ணாடிகளோடு உடையும் நிலையிலுள்ள மற்றைய கண்ணாடிகளையும் மாற்றிவிட்டால் வேலை முழுமையாக முடிந்துவிடும் என்றும் சொன்னார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 ஒக்ரோபர் 2022



# காவடி: திலீபனுக்கு செய்யும் அஞ்சலியா?

○ ந.பரமேஸ்வரன்

சைவ சமயம் உலகின் புராதன மதம், தொன்மைவாய்ந்த மதம் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. சிந்துவெளி நாகரிகத்துக்கு முற்பட்ட கால பழமை வாய்ந்தது சைவ சமயம் என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய கலைக் களஞ்சியம்கூட இந்துமதம் உலகின் பழமை வாய்ந்தமதம் (Oldest Religion in the world) என்பதையும் இலிங்க வழிபாடு கிறிஸ்துவுக்கு முன் 7 ஆம் நூற்றாண்டிலேயே இருந்ததாகவும் கூறுகிறது.

இப்படியான பழம்பெருமை வாய்ந்த சைவ சமயத்துக்கே உரித்தான விடயங்களின் தன்மையைக் கெடுக்கும் வகையில் சைவ சமயத்தவர்கள் ஈடுபடுவது கவலைக்குரிய விடயம்.

இலங்கையை திருமூலர் சிவபூமி என அழைத்ததாக யாழ்ப்பாணத்து சைவசித்தாந்திகள் தம்பட்டம் அடித்துக்கொள்கின்றனர். திருமூலர் சிவபூமி என அழைத்த சிவபூமியில் சிவ நிந்தனை அல்லது தெய்வநிந்தனை செய்யும் செயற்பாடுகளில் சைவ சமயத்தவர்கள் ஈடுபடுவதைப்பற்றி இந்த யாழ்ப்பாணத்து சைவசித்தாந்திகள் கண்ணிருந்தும் குருடர்கள் போன்று கண்ணை மூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கின்றனர்.

கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி , பன்னிரண்டு நாள்கள் நீராகாரம்கூட அருந்தாமல் தனது உயிரைத் தியாகம் செய்த தியாகதீபம் திலீபனின் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த இறுதி நாள் அஞ்சலி நிகழ்வில், கைதடியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் திலீபனுக்காக பறவைக்காவடி எடுத்தனர். புலிகளின் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற காலத்திலும் சிலர் திலீபனுக்காக பறவைக்காவடி எடுத்தனர். புலிகளுக்கு கடவுள் நம்பிக்கை இல்லாதபடியால் அவர்கள் திலீபனுக்கு பறவைக்காவடி எடுத்ததைப் பற்றி எவரும் எதுவுமே பேசவில்லை.

ஆனால், யாழ்ப்பாண கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என மார்தட்டிக்கொள்ளும் நாவலரின் வாரிசுகள் திலீபனுக்குக் காவடி எடுத்ததைப்பற்றி வாய் திறக்காமலிருப்பது ஏன்?

நானறிந்த வரையில் யாழ்ப்பாணத்தில் முதல் முதலில் பறவைக்காவடியை அறிமுகம் செய்தவர் குரும்பசிட்டியை சேர்ந்த இந்துதாசன் என்பவரே. அதுவரையும் ஆட்டக்காவடிகள் தான் யாழ்ப்பாணத்தில் இருந்தன. சந்நிதிக்கே கூடுதலான காவடிகள் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் சென்றன. காவடி எடுப்பவர்கள் தங்களது இஷ்டதெய்வத்தை நினைந்து விரதமிருந்து காவடி எடுத்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றிக்கொள்கின்றனர். அப்படியானால் திலீபனை சைவசமயக் கடவுளாக ஏற்றுகொண்டால் , அவருக்கு காவடி எடுப்பதில் தவறில்லை. ஆனால், மக்களுக்காக உயிர்நீத்த ஒரு தியாகியின் நினைவேந்தலில் காவடி எடுப்பதென்பது, திலீபனின் தியாகத்தையும் கொச்சைப்படுத்துவதோடு, சைவசமய வழிபாட்டு மரபையும் கேலிக்குள்ளாக்குவதை ஏன் எவரும் கண்டுகொள்ளவில்லை. தியாகி திலீபனுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செய்ய பல வழிகள் உள்ளன. எப்படி திலீபன் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்தாரோ அதேபோன்று அடையாள உண்ணாவிரதம் இருக்கலாம், தீபமேற்றலாம், மலர்கள் தூவலாம், கவிதைகள், பாடல்களால் கூட அஞ்சலிக்கலாம். அதுவே மக்களுக்காக மடிந்த ஒரு விடுதலைப்போராளிக்கான அஞ்சலி. அதைவிடுத்து காவடி எடுக்கிறோம் என்று சொல்லி, மற்றவர்களுக்கு படம் காட்ட நினைப்பது திலீபனின் தியாகத்தின் மீதும், சைவ சமயத்தின் மீதும் ஒரேநேரத்தில் சேற்றை வாரியிறைக்கும் காரியமாகவே இருக்கும்.



திலீபனின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவில் நல்லை ஆதீனம், தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுக்குக்கூட போராளிக்கும், கடவுளுக்கும் வித்தியாசம் தெரியாதா? காவடி தூக்குவது திலீபனுக்கும், சைவ சமயத்துக்கும் இழுக்கை உண்டாக்கும் என்ற புரிதல் கூட இல்லாதவர்களைத்தான் நாம் அதியுயர் ஆதீனங்களிலும், நினைவேந்தல் கட்டமைப்புகளிலும் வைத்திருக்கிறோமா? இனியாவது இப்படி திலீபனின் மகத்துவத்தையும், சைவ சமயத்தின் மேன்மையையும் கெடுக்க நினைக்காதீர்கள்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# ஜெனிவாத் தீர்மானம்...

ணத்தின் பகுதியாக மாற்றலாம் என்று சிந்திக்க வேண்டும். ஆனால், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உட்பட கூட்டமைப்பை விமர்சிக்கும் பலரிடமும் அவ்வாறான அரசியல் தரிசனம் உண்டா? என்ற கேள்வியை கடந்த 13 ஆண்டு கால அனுபவம் கேட்க வைக்கின்றது.

கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியலானது புரோஅக்டிவ் proactive ஆக, அதாவது தானாக ஒன்றைக் கட்டியெழுப்பும் அரசியலாக இல்லை. அது ரியாக்டிவ் reactive ஆகத்தான் அதாவது பதில் வினையாற்றும் அரசியலாகத் தான் காணப்படுகிறது. அதாவது தேசத்தை நிர்மாணித்தல் என்பது எதிர்த்தரப்புக்கு எதிர்வினை ஆற்றும் தற்காப்பு நிலை அரசியலாகத்தான் மாறியிருக்கிறது. மாறாக தேசத்தை நிர்மாணிப்பதற்கான நிறுவனங்களை உருவாக்கி அதனூடாக தன் உள் அரசியல் எதிரியையும் வெளி எதிரிகளையும் எப்படித் தோற்கடிக்கலாம் என்ற சிந்தனை கூட்டமைப்பிடமும் இல்லை. கூட்டமைப்பின் எதிரிகளிடமும் இல்லை.

கூட்டமைப்பின் அரசியல் தவறுகள் காரணமாகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் அந்தக்கட்சி ஏகபோகத்தை இழந்தது. ஆனால், அந்தத் தோல்வியை தன்னுடைய முழுமையான வெற்றியாக மாற்றிக்கொள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முடியவில்லை. ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளாலும் முடியவில்லை. இதனால் தமிழ் வாக்குகள் மேலும் சிதறி, தமிழ்மக்களின் பேரபலம் சிதைந்தது. அதாவது தேசத் திரட்சி பல வீனமடைந்தது.

**தன் உள் அரசியல் எதிரியைத் திட்டித் தீர்ப்பதிலேயே தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர் களின் சக்தி பெருமளவுக்கு விரயம் செய்யப்படுகிறது. இதனால்தான் கடந்த 13 ஆண்டு களாக பொறுப்புக் கூறலை ஜெனிவா வுக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை.**

இப்பொழுதும் ஜெனிவா விவகாரத்தில் கூட்டமைப்பு செய்வது பிழை என்றால் ஏனைய கட்சிகள் அதைத் தோற்கடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய மக்கள் ஆணையை முதலில் பெற வேண்டும். அந்த மக்கள் ஆணையை பெறுவதற்கு ஒரு பலமான மாற்று அணியைக் கட்டி எழுப்ப



வேண்டும். மக்களாணையை பெற்ற பின் பொருத்தமான வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுத்து, வெளியுறவுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதனூடாக ஜெனிவாவையும் இந்தியாவையும் ஏனைய தரப்புகளையும் அணுக வேண்டும். ஆனால், அப்படியான சிந்தனைகளையோ செயற்பாடுகளையோ தமிழ் அரசியலில் மிகக் குறைவாகவே காணமுடிகிறது. ஒப்பிட்டுளவில் அதிக ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்போடுதான் வெளியுலகம் பேசும்.

தன் உள் அரசியல் எதிரியைத் திட்டித் தீர்ப்பதிலேயே தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் சக்தி பெருமளவுக்கு விரயம் செய்யப்படுகிறது. இது ஒரு விதத்தில் நெகட்டிவ் ஆனது. மாறாக பொசிட்டிவாக தனக்கு சரி என்று தோன்றும் ஓர் அரசியல் இலக்கை முன்வைத்து தேசத்தைக் கட்டியெழுப்ப இந்தக் கட்சிகளால் முடியவில்லை. இதனால்தான் கடந்த 13 ஆண்டுகளாக பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. பேராசிரியர் ஜூட் லால் கூறுவது போல தமிழ்மக்கள் கடந்த 13 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றிகள் எதையும் பெற முடியவில்லை. வேண்டுமானால் நெருப்பை அணையாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படலாம்.

தனது உள் அரசியல் எதிரிகளைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்து அவர்களுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதிலேயே தமிழ்ச் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. மாறாக, ஆக்கபூர்வமான விதத்தில் பொசிட்டிவாக, புரோஅக்டிவாக, ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய வழி வரைபடத்தை தயாரித்து முன் செல்லும்போது அரசியல் எதிரிகள் படிப்படியாக உதிர்ந்துபோய் விடுவார்கள்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மூன்று கட்சிகளும் கூட்டாக கடிதமெழுதி கிட்டத்தட்ட 20 மாதங்கள் கழிந்துவிட்டன. இந்த 20 மாதங்களிலும் தாம் ஜெனிவாவை நோக்கி முன்வைத்த கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இந்தக்கட்சிகள் என்னென்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு தொடர்ந்து வாக்காளர்களை ஏமாற்றுகிறது என்று சொன்னால், அவ்வாறு ஏமாற்றாத ஏனைய கட்சிகள் கடந்த 20 மாதங்களாக என்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு ஏமாற்றுகிறது என்று சொன்னால் மட்டும் போதாது. தாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்றும் சொல்ல வேண்டும். பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டுபோகும் விடயத்தில் இவர்கள் இதுவரை சாதித்தவை என்ன? மிகக்குறிப்பாக அந்த விடயத்தை நோக்கி அவர்கள் கட்டியெழுப்பி வைத்திருக்கும் கட்டமைப்புகள் எத்தனை?

சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிச் செல்லும் வழியில் கடந்த 20 மாத காலத்தில் எதுவரை முன்னேறி இருக்கிறோம் என்பதனை மூன்று கட்சிகளும் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் மேற்படி கட்சிகள் தமது வாக்குறுதி [illegible] அதை நம்பும் தமது மக்களுக்கும் பொறுப்புகூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org